for young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் மாத இதழ்



# தேசத்திற்காய் திறப்பில் நின்றிட வா!

Vol 29-Issue 08 - August - 2025

Private circulation only



# சமுகத்தப்ப மேஜை

Rev. Selvinraj G Charles



அன்பான இளம் வாலிபர்களே! இந்த புதிய மாதத்தில் சமுகத்தப்ப மேஜையின் மேன்மையை அறிந்துக் கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

கூடாரத்திலுள்ள சமுக ரொட்டி மேஜை, பிரசன்ன ரொட்டி மேஜை என்று அழைக்கப்படுகிறது. இதில் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களைக் குறிக்கும் 12 ரொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. மேலும் இது அவரது மக்களுடனான ஐக்கியத்தின் அடையாளமாகும். இந்த மேஜை அகாசியா மரத்தால் ஆனது. இது தங்கத்தால் மூடப்பட்டிருந்தது.

*முக்கியத்துவம் (Importance):*

இஸ்ரவேலின் வாழ்வாதாரத்திற்கும், வாழ்க்கைக்கும் கடவுள்தான் ஆதாரம் என்பதை சமுகத்தப்பம் தொடர்ந்து நினைவூட்டுகிறது. கடவுளுக்கு முன்பாக தேவ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் ஆசாரியர்களின் பங்கை இது குறிப்பதாக இருந்தது. இந்த மேஜையில் புளிப்பில்லாத 12 அப்பங்கள் மேஜையின் மீது இரண்டு அடுக்குகளாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இந்த ரொட்டிகள் வாரந்தோறும் மாற்றப்பட்டு ஆசாரியர்களால் உண்ணப்பட்டது. இது கடவுளுடன் ஒரு கூட்டு உணவைக் குறிக்கிறது. மற்றும் கிறிஸ்துவை "வாழ்க்கை அப்பம்" என்று அடையாளப்படுத்துகிறது.

*நோக்கம் (Purpose):*

கடவுளுக்கு செலுத்தப்படும் அடையாளப்பூர்வமான காணிக்கையாக சமுகத்தப்பம் இருந்தது. இஸ்ரவேலர் தங்கள் வாழ்வாதாரத்திற்கு கடவுளைச் சார்ந்திருப்பதைக் குறிக்கிறது. நமது வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஆண்டவரை ஆராதிக்க வேண்டும். இது தம்முடைய மக்களுடன் ஐக்கியப்படுவதற்கான கடவுளின் விருப்பத்தை பிரதிநிதித்துவபடுத்தியது. ஆசாரியர்கள் பழைய அப்பத்தை சாப்பிடுவார்கள். இது கடவுளுடன் பகிர்ந்து கொண்ட உணவைக் குறிக்கிறது.

*மேஜையின் கூட்டுறவு (Table Fellowship):*

ஒரு மேஜை என்பது உணவு உண்ணும் இடம். சில சமயம் இந்த வார்த்தை உணவைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சங்கீதம் 23:5 "என் எதிரிகளின் முன்னிலையில் நீர் எனக்கு முன்பாக ஒரு மேஜையை ஆயத்தப்படுத்துகிறீர்". கூடாரத்தை அமைத்ததன் நோக்கம் தமக்கு ஒருவசிப்பிடத்தைவழங்குவது மட்டுமல்லாமல், தம்முடைய விருந்தினர்கள் பங்கெடுத்து திருப்தி அடையக்கூடிய ஒரு மேஜையை வழங்குவதுமாகும். மேஜை என்பது உணவு மற்றும் ஐக்கியத்திற்கான இடமாகும். நாம் ஆண்டவரை துதிப்பதின் மூலம் ஐக்கியப்படுகின்றோம். ஏனென்றால் ஒருவருக்கொருவர் இணக்கமாக இருப்பவர்கள் மட்டுமே ஒரே மேஜையில் நிம்மதியாக உட்கார முடியும். குறிப்பாக விருந்தினருடன் கூட்டுறவு கொண்டவர்கள் மட்டுமே அவரது மேஜையில் பங்கு பெற முடியும். இந்த மேஜையைப் போல் நாமும் கிறிஸ்துவுடன் கூட்டுறவு கொண்டிருந்தால் தான் அவரை முழுமனதோடு துதித்து ஆராதிக்க முடியும்.

*மேஜையின் உணவு (Food on the Table):*

சமுகத்தப்பம் கர்த்தரை அவருடைய மக்களின் உணவாகக் குறிக்கிறது. சன்னதியில் அனுபவிக்கப்பட்ட அவரது மக்களின் உணர்வாகக் காட்டுகிறது. கடவுளின் குமாரனாகிய இயேசுவின் கரையற்ற பரிபூரணத்தைக் குறிக்கும் வகையில் அப்பங்கள் மெல்லியமாவால் செய்யப்பட்டன. அசுத்தமான அல்லது தூய்மையற்ற தானியம் இல்லை. மாவில் எந்த ஒரு உமியும் அரைக்கப்படவில்லை. எந்தகரடுமுரடான தானியமும் இல்லை. இயேசுவிடம் கூட மற்றவரிடம் காணப்பட்ட கரடுமுரடான தன்மை அவரிடம் காணப்படவில்லை. புளிப்பும் இல்லை. ஏனென்றால் பாவம் அவரிடமில்லை. ரொட்டியின் மீது தூபவர்க்கம் வைக்கப்பட்ட பிறகு அதன் மீதுள்ள பகுதி தங்க பலிபீடத்தில் எரிக்கப்பட்டு எழுந்த இனிமையான நறுமணம் ரொட்டியின் மீது இருந்தது. இவ்வாறு அப்பங்கள் யெகோவாவின் மகிழ்ச்சி மற்றும் மகிழ்ச்சிக்காக அவருக்கு முன்பாகக் கொண்டு வரப்படுகின்றன. நாமும் மகிழ்ச்சியோடு அவரை பலிபீடத்தில் ஆராதிப்போம். நமது ஆராதனையும் தூய்மையான ஆராதனையாக இருக்க வேண்டும்.

*உடன்படிக்கை உணவு (Covenant Food):*

இது யெகோவாவுக்கும், இஸ்ரவேலர்களுக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையை நினைவுபடுத்துவதாக இருந்தது. கடவுளின் முன்னிலையில் உணவு உண்ணுவது, இஸ்ரவேலர் கடவுளால் நெருக்கப்பட்டனர் மற்றும் நேசிக்கப்பட்டனர் என்பதை இது காட்டுகின்றது.

*இதுபோல் நாமும் ஆண்டவரை ஆராதிக்கும் போது கடவுளுடன் நெருக்கமான உறவில் இருக்கின்றோம் என்பதை நமக்கு கற்றுத் தருகிறது. நாமும் சமுகத்தின் அப்பத்தைப் போல் எப்போதும் ஆண்டவரைத் துதித்து கொண்டேயிருப்போம். ஆமென்!*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.**

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266



**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**


ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 & 7 |
| திருச்சபைகள் ஏன் தோல்வி அடைகின்றன | - 8 |
| இடி டிராகனின் நிலம் - பூட்டான் | - 10 |
| இந்தியாவின் 79 ஆசீர்வாதங்கள் | - 11 - 14 |
| நாள்பட்ட நரம்பியல் பிரச்சனைகள் | - 15 |
| பகுதி நேர வேலை மோசடி | - 17 |
| வீட்டு வாசற்படியில் | - 20 |
| குதிரை வாசல் | - 23 |


# தேசத்திற்காய் திறப்பில் நின்றிட வா!



என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

டேவிட் பிரெய்னார்டு என்ற தேவ ஊழியர் மன்றாட்டு ஜெபத்தினை ஏறெடுக்க, முற்றிலுமாக தன்னை அர்ப்பணித்திருந்தார். இவர் அமெரிக்காவின் அடர்த்தியான காடுகளில் இரவு முழுவதும் வியர்வையால் தனது ஆடை நனைந்து போகுமளவும் வியாகுலத்துடன் ஜெபித்ததாக கூறப்படுகிறது. அதனிமித்தம் திடீரென்று அந்த பிராந்தியம் முழுவதும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அபரிமிதமாய் ஊற்றப்பட்டது. நாலு பெண்களும், ஒரு சில குழந்தைகள் மாத்திரமே அவரது கூட்டத்தில் இருந்தனர். மன்றாட்டு ஜெபம் ஏறெடுத்தபிறகு, மக்கள் கூட்டம் திரள்திரளாக நான்கு திசைகளிலுமிருந்து அவரை நோக்கி வந்து, அவர் சவாரி செய்த குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு இரட்சிப்பின் வழியை தங்களுக்கு தெரிவிக்கும்படி கதறினார்கள். தேவ வார்த்தை அம்பைப்போல அவர்களுடைய இருதயத்தை ஊடுருவி பாய்ந்ததினிமித்தம் தங்களுடைய வேதனையை மறைத்து வைக்க இயலாமல் மிகுந்த துயரத்துடன் “எங்கள் மேல் கிருபையாயிரும்” என்று கதறினார்கள். மேலும் தங்கள் வாழ்வை சிலுவையின் அண்டையில் அர்ப்பணித்தார்கள்.

மன்றாட்டு ஜெபம் என்பது ஆண்டவருடைய இராஜியத்தை விரிவுப்படுத்துவதாகும். சாத்தானைத் தோற்கடித்து, அவனுடைய அந்தகார ஆட்சியை அகற்றி, தேவ இராஜியத்தை எல்லோருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் விரிவாக்குவதாகும். ஆபிரகாம் லோத்திற்காக போராடி ஜெபித்து ஜெயம் பெற்றதுபோல (ஆதி. 18:28, 23), மோசே இஸ்ரவேலரின் வெற்றிக்காக போராடி அமலேக்கியர் மேல் வெற்றியடைந்தது போல, எலியா பின்னடைந்த இஸ்ரவேல் மக்களுக்காக மன்றாடி ஜெபித்தது போல, நானும், நீங்களும் நம்முடைய தேசத்திற்காக மன்றாட்டு ஜெபம் செய்ய அழைக்கப்படுகிறோம். எப்பாப்பிரா, கொலோசெ திருச்சபை விசுவாசிகள் ஆவிக்குரிய முதிர்ச்சி பெறவும், ஆவிக்குரிய வளர்ச்சியடையவும் எப்பொழுதும் போராடி ஜெபித்தது போல், நமது தேசம், திருச்சபை, வாலிபர்கள் எழுப்புதல் அடையும்படி மன்றாடி ஜெபிக்க நம்மை அர்ப்பணிப்போமா? மன்றாட்டு ஜெபம் மட்டுமே நம்முடைய வாழ்வில் மற்றும் ஊழியத்தில் வெற்றியைக் கொண்டு வரும்.

ஜுலை மாதம் சென்னை மற்றும் பொன்னேரியில் வாலிபர்களின் மாதாந்திர ஐக்கிய கூடுகை புதிதாக ஆரம்பிக்க ஆண்டவர் கிருபை செய்தார். இப்படிப்பட்ட ஐக்கிய கூடுகைகள் நமது முன்னேற்றப்பணி மாவட்டங்களில் நடைபெற ஜெபிப்போம்! செயல்படுவோம்!!

ஆகஸ்ட் மாதத்தில் அநேக வாலிபர் கூடுகைகள் நடைபெற உள்ளன. கர்த்தர்தாமே இக்கூடுகைகள் மூலமாக வல்லமையான காரியங்களை நடப்பிக்கதக்கதாக உங்களுடைய ஜெபங்களில் நினைவு கூறுங்கள். நமது இயக்கத்தின் தேசிய உபவாச ஜெப முகாம் ஆகஸ்ட் 8, 9, 10 ஆகிய நாட்களில் திருப்பத்தூரில் உள்ள கிறிஸ்து குல ஆசிரமத்தில் நடைபெற உள்ளது. இந்த ஜெப முகாமில் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,
ஜெ. டேனியல் அருள்மணி



# ஏனோக்கின் மன்றாட்டு ஊழியம்

Mr. Isaac Kamalesh

TORAH MISSION

1st WEEK MESSAGE

ஆதியாகமம் முதல் பத்து அதிகாரங்களுக்குள் வரும் பத்து சந்ததியினரின் பெயர்களில் ஏனோக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்தவர். ஏழு வசனங்களில் இவருடைய சரித்திரம் முடிவடைகிறது. இதில் ஏனோக்கின் அப்பா பெயர் யாரேத். இதன் அர்த்தம் **"கீழே இறங்குதல்"** (*Shall come down*). இவனுடைய ஆயுசின் வருஷங்கள் 962. ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றான். மெத்தூசலாவின் அர்த்தம் **"அவருடைய மரணம்"** (*His death shall bring*). ஏனோக் என்பதின் அர்த்தம் **"கற்றுக் கொடுத்தல்"** (*Commencement*). இவர் 365 வருஷங்கள் (நமக்கு 1 வருடத்திற்கான நாட்கள்) வாழ்ந்ததாக கூறி சரித்திரம் முடிவடைகிறது. ஏனோக்கின் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரு வார்த்தைகளில் ஒன்று **"சஞ்சரித்துக் கொண்டிருந்தான்"** மற்றொன்று **"எடுத்துக் கொள்ளப்பட்டான்"** என்பதே. ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு தான் நோவாவின் ஜலப்பிரளயத் தீர்ப்பு வந்தது.

இப்போது ஏனோக்கு ஏன் முக்கியத்துவமானவர் என்பதைக் கூறிவிட்டு அவரின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடத்தைப் பார்ப்போம். ஏற்கனவே நாம் சொன்னது போல் இரண்டு வார்த்தைகளில் இரண்டாவது வார்த்தையான ஏனோக்கு **"எடுத்துக் கொள்ளப்பட்டான்"** என்ற இந்த வார்த்தை யாருக்கு கனகச்சிதமாக பொருந்தும் என்றால் நமக்கு தான். அதாவது புறஜாதி சபை அல்லது பூரண பிரமாண சபைக்கு தான். அப்படியானால் ஏனோக்கு யாருக்கு அடையாளமானவன் என்றால் புதிய ஏற்பாட்டு சபையாகிய நமக்கு தான். புரிந்துக் கொள்ளும்படி சொன்னால், நாம் முதலாவது எடுத்துக்கொள்ளப்படுவோம். இரண்டாவது கர்த்தரின் நியாயத்தீர்ப்பு வரும். எப்படியென்றால் ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு நோவாவின் ஜலப்பிரளயத் தீர்ப்பு வந்தது. இப்பொழுது முக்கிய வார்த்தையின் முதல் வார்த்தைக்கு செல்வோம். அதுதான் **"சஞ்சரித்துக் கொண்டிருந்தான்"** என்பதுதான். நாமும் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று நம்மில் எத்தனை பேருக்கு புரிகிறது என்று தெரியவில்லை.

சரி இப்போது ஜெபம், மன்றாட்டு, சஞ்சரித்தல் என்ற படி நிலைகளைப் பார்ப்போம். ஓர் ஆராதனை அல்லது நிகழ்ச்சி அல்லது முக்கிய கூடுகைகள் என கிறிஸ்தவ வட்டாரங்கள் ஜெபத்தில் ஆரம்பித்து ஜெபத்தில் முடிக்கிறது. இதை தவறாக சொல்லவில்லை. மேலும் ஒரு சிலர் அல்லது கூட்டத்தினர் விசேஷித்த கூடுகைகள், வாரம் ஒருமுறை ஜெப ஒழுங்கு அல்லது மன்றாட்டு ஜெபங்கள் நடத்துகின்றனர். இதுவும் நல்லது. ஆனால் சஞ்சரித்தல் என்றால் என்ன? சஞ்சரித்தல் என்பது எப்போதும் நாம் தேவனோடு ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். அதாவது நம் பார்வை, சிந்தனை, வார்த்தை ஜெப சிந்தனையால் நிரப்பப்பட வேண்டும். இதை புதிய ஏற்பாட்டில் புறஜாதியானான கொர்நேலியு கச்சிதமாகச் செய்தான். இவனைக் குறித்து அப்போஸ்தலர் 10:2இல் **"எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்"** என்று சாட்சி பகருகிறது. அப்படியானால் நம்முடைய அழைப்பு என்ன? நிகழ்ச்சி நிரல்களில் முதலில் வருவதோ, ஜெபத்திற்கென குறிப்பிட்ட நேரத்தையோ, நாட்களையோ குறித்து ஜெபிப்பது மட்டுமல்லாமல் நாமே ஜெபமாக மாற வேண்டும்.

தம்பி, தங்காய் நம்முடைய இயக்கத்தின் மறைந்த முன்னாள் General Secreatary பேட்ரிக் ஜாஷ்வா அண்ணன் ஜெபத்தைக் குறித்து சொல்லும் வார்த்தைகள் என்னவென்றால்

**காரை ஓட்டுபவர் டிரைவர் (Driver): அவர் காரை ஓட்டி, ஓட்டி (Drive... Drive...) பிறகு அவர் ஒரு Driverஆக மாறிவிடுகிறார்.**

**விளையாட்டு வீரர் (Player): அவர் விளையாடி, விளையாடி (Play... Play...) பிறகு அவர் ஒரு Playerஆக மாறிவிடுகிறார்.**

**அதேபோல் நாமும் ஜெபித்து... ஜெபித்து... ஆவிக்குரிய வளர்ச்சியில் நாமே ஒரு Prayerயாக மாறிவிட வேண்டும்.**

நாம் தேவனோடு சஞ்சரிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் நம் வாழ்வும், மூச்சும் ஜெபமாக மாறிவிட வேண்டும். நம் தேசத்திற்கு தேவனோடு சஞ்சரிக்கும் மன்றாட்டு ஊழியம் எத்தனை அவசியம் என்பதை உணர வேண்டும். உன் கண்ணில் படும் காட்சிகள், உன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள், உன் காதுக்கு கேட்கும் சத்தங்கள் அல்லது செய்திகள் அனைத்தும் ஜெபக்குறிப்பாக மாற வேண்டுமே தவிர, எனக்கு ஜெபக் கடிதம் வரவில்லை, ஜெபக்குறிப்புகள் இல்லையென்று சொல்லிக் கொண்டிருக்காதே. அர்ப்பணமுள்ள உன் வாழ்வில் உன் மூச்சு ஜெபமாக மாறட்டும். தேசத்தின் எழுப்புதல் உன் தலைமுறையில் நீ காணலாம்.

எமில் அண்ணன் சொல்வது போல் வேதத்தில் தொலைந்தது ஒரு ஆடு. ஆனால் நம் தேசத்திலோ அது 99 ஆடுகள்.

**ஒன்றை சொல்லி நிறைவு செய்கிறேன். தேவன் உன்னை எடுத்துக் கொள்ளும் போது, நீ அவரோடு சஞ்சரித்துக் கொண்டிருக்க வேண்டும். அவரின் ரகசிய வருகை அதாவது சபை எடுத்துக் கொள்ளப்படும் நேரம் உன் ஜெபக்கூடுகையின் போதோ அல்லது உன் ஜெப நேரத்திலோ வராது. எனவே ஏனோக்கைப் போல தேவனோடு சஞ்சரிக்கும் நிலைக்கு முன்னேறு... நீ வெட்கப்பட்டுப் போக மாட்டாய்... அல்லேலூயா!**

**நாம் தேவனோடு சஞ்சரிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.**
**ஆகையால் நம் வாழ்வும், மூச்சும் ஜெபமாக மாறிவிட வேண்டும்.**



# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

**(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)**

(சந்தித்த இடம்: *2nd wife Restaurant*)

சாதுரியன்: டேய் நான் எங்க வரணும்

விஷயம்: நான் *2nd wife* கிட்ட நிக்கிறேன்

சாதுரியன்: எனக்கு கேக்கல சரியா சொல்லு

விஷயம்: நான் *Land Mark* சொல்றேன். நீ வந்து சேரு.

(அனைவரும் வந்து சேர்ந்து விட்டனர்)

சாதுரியன்: ஏன்டா *2nd wife* கடை பெயரா?

விஷயம்: ஆமா ஏன் அப்படி கேக்குற!

சாதுரியன்: எனக்கு கொஞ்ச நேரம் எதுவுமே புரியல

விஷயம்: நீ என்ன நினச்ச

சாதுரியன்: என்னத்த நினைக்க

விஷயம்: அதாவது *Positive*வா யோசிக்கணும். வீட்டுல சாப்பிட்டா அது மனைவி சமையல். அதை விட்டுட்டு கடையில சாப்பிட்டா, இங்க தான் சாப்பிடுவேன் அப்படின்னு அர்த்தம். நீ என்ன யோசிச்சிருப்ப *2nd wife*ன்னா ஒரு ஆளை யோசிச்சிருப்ப அப்படித்தானே...

ரகசியம்: ம்ம்... உள்ளத்தின் நிறைவு

சாதுரியன்: சரி இவ்வளவு பேசுரியே வீட்டுக்கு போய் உன் *wife* எங்க சாப்பிட்டிங்கன்னு கேட்டா என்ன சொல்லுவ

விஷயம்: (சிரித்துக்கொண்டே) அங்க உனக்கு பாடம் எடுத்த மாதிரி பாடம் எடுத்தா குடும்பம் உடைஞ்சிடும். அதனால *Hotel*ல சாப்பிட்டேன். அங்க உன் கை பக்குவத்திலேயே *Tasta* இருக்கும்ன்னு சொல்லிட்டு...

ரகசியம்: கடை பெயர் மட்டும் தயவுசெய்து சொல்லிராத...

விஷயம்: அதான் நானும் யோசிக்கிறேன்

ரகசியம்: சரி (உள்ளே போய் உட்காருவோம்) எனக்கு சாயங்காலம் 6 மணிக்கு ஒரு நிச்சயதார்த்த *Function*க்கு போகணும்

சத்தியன்: (சரி! சரி! ஆர்டர் பண்ணு) நான் பழைய ஏற்பாட்டில் ஒரு கேள்வி கேட்கிறேன் சொல்லுங்க பார்ப்போம்

ரகசியம்: நீ கேளு முதல்ல என்ன ஆர்டர் பண்ண

விஷயம்: *2nd wife Signature* ஆர்டர் பண்ணு

சாதுரியன்: டேய் தயவுசெய்து ஒழுங்கா சொல்லுடா... நீ திடுக்கிடும் தகவல் மாதிரியே சொல்றியே!

விஷயம்: பதறாத... வேறு ஒன்னுமில்லை. இங்கே உள்ள *Special Food* என்னன்னு கேட்டு ஆர்டர் பண்ணு

(சாப்பாடு *Alfaham Mandi & Mutton Ribs (Family Size)* வந்துவிட்டது)

ரகசியம்: சரி கேளு இப்போ

விஷயம்: *Rib* ஆர்டர் பண்ணுன உடனே என்ன நினச்ச

சாதுரியன்: வீட்டுக்கு போனா நமக்கு *Rib* இருக்குமான்னு நினைச்சேன் போதுமா (எல்லோரும் சிரிப்பு)

சத்தியன்: சரி கேட்குறேன் "பழைய ஏற்பாட்டில் முக்கிய நிகழ்வு எது?" (ஒன்னே ஒன்னு தான் சொல்லணும்) (மூவரும் ஒவ்வொரு நிகழ்வை சொன்னார்கள்) அனைத்தும் தவறு. முக்கிய நிகழ்வு "சீனாய் மலையில் தேவன் மனுக்குலத்திற்குக் கொடுத்த கற்பனைகளும், நியாயப்பிரமாணமும் தான். அதைத் தான் இஸ்ரவேலர்கள் "*Betrothal*" நிச்சயதார்த்த நிகழ்வு என்பார்கள். திருமணம் பிறகுதான் நடைபெறும்.

சாதுரியன்: ஓ!! அதான் நிச்சயதார்த்த நிகழ்வுகளில் பொண்ணு மாப்பிள்ளை *Bible* மாத்துராங்களா!

(இருக்கலாம்...)

சத்தியன்: *Bible* பத்தி நீ என்ன நினைக்கிற, அதாவது *Bible*இல் மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கியிருக்கும். முதலாவது பெயர்கள், சந்ததிகள் இடம்பெற்றிருக்கும். இரண்டாவது கடவுள் எப்படிப்பட்டவர்? அவருக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது, நாம் எதை செய்யணும், செய்யக்கூடாது என்றும் அவரோடு வாழ்வதற்கு நாம் நம்மை ஒழுங்குபடுத்தும் காரியங்களும் இருக்கும். மூன்றாவது நமக்கு என்று கடவுள் ஏற்படுத்தியிருக்கும் வீடு பற்றி (அதாவது நித்தியமாக வாழப்போகும் பரலோகம்) இருக்கும். இந்த மூன்று அம்சங்களும் ஆதியாகமம் முதல் 10 அதிகாரங்களுக்குள் இருக்கும். அதன் விரிவான விளக்கம் ஆதியாகமம் 11 முதல் வெளி 22 வரை இருக்கும்

மூவரும்: (ஓ! ஹோ! சங்கதி இப்படியா... சரி சரி)

சத்தியன்: இன்னும் ஒரு பழங்கால வரலாற்று நிகழ்வைச் சொல்கிறேன் கேளேன். அதாவது ஒவ்வொரு யூத குடும்பமும் மூன்று குறிப்பேடுகளை தொடர்ந்து பராமரிப்பார்கள். ஒன்று தங்களின் சந்ததிகளைக் குறித்து வைத்துக் கொள்வார்கள். இது தகப்பனாரின் வேலை. இரண்டாவது தாய் தன் மகன்களைப் பற்றி எழுதுவாள். அவனை எப்படி வளர்த்திருக்கிறேன். அவனுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்ற குறிப்பு இருக்கும். மூன்றாவது தன் மகனின் வருமானம், தொழில், செல்வம் வரப்போகும் மணவாட்டிக்கு அவன் சேர்த்து வைத்து கொடுக்க வைத்திருக்கும் சொத்து இவை எல்லாம் இடம்பெற்றிருக்கும். இந்த மூன்று குறிப்பேடுகளையும் தேர்வு செய்த மணவாட்டியிடம் கொடுத்துவிட்டு, இதை வாசித்து உன்னைத் தயார் செய்து கொள். ஒரு வருடம் கழித்து நினையாத நேரத்தில் மணவாளன் வந்து உன்னை அழைத்துச் செல்வான் என்று சொல்லிவிட்டு போவார்கள்.

ரகசியம்: டேய் நானும் ஒன்னு சொல்றேன். எனக்கு இப்ப புரிஞ்சிட்டு. அதாவது மணவாளன் இந்த ஒரு வருடத்தில் வீடு கட்டுவான். பிறகு அவன் திருமணத்திற்கு தயாரானதை பார்த்த அவனது தந்தை திருமண தேதியை குறிப்பார். யூத குலத்தில் தகப்பன் தான்

**-இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்**

FELLOWSHIP LUNCH

Mr. Isaac Kamalesh



# கடவுளின் இருதயத்தை வெளிப்படுத்தும் புலம்பல்

## (LAMENT OF EXPRESSING THE GOD'S HEART)

Rev. Daniel Gnanapragasam

OT MISSION

2nd WEEK MESSAGE

இருதயம் என்பது உணர்ச்சிகள், நம்பிக்கைகள் மற்றும் தார்மீகத் தேர்வுகளின் பிறப்பிடமாகக் காணப்படுகிறது. இவையனைத்தின் மையமாக இருதயத்தை உண்டாக்கிய கடவுளின் ஆத்மார்த்தம் வெளிப்பட வேண்டும். ஏனென்றால் மனித இருதயத்தைக் கடவுள் தனது சொந்த இருதயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் படைத்தார். மேலும் கடவுள் மனிதனை அணுகும் ஒரே இடமாகவும் மனித இருதயம் காணப்படுகிறது.

ஏதேன் தோட்டத்தில் விளைந்த பாவத்தால் மனித இருதயம் கறைபட்டுப் போனது (எரே. 17:9). ஆனாலும் கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கையானது பாவ இருதயத்தை மாற்றி, புதுப்பித்து நீதியின் நிலைக்கு மீட்டெடுக்கும் அதிகாரத்தை அளிக்கிறது. **"நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்"** (எரே. 30:22) என்ற இவ்வசனம் புதுப்பிக்கப்பட்ட மனித இருதயத்தை வாஞ்சிக்கும் தேவனுடைய இருதயத்தை வெளிப்படுத்துகிறது. கடவுளின் இருதயம் அன்பு, இரக்கம், கருணை, கிருபை மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றால் நிறைந்துள்ளது. இத்தகைய பண்புகளைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும் எந்தவொரு தனிமனித இருதயமும் மாற்றம் பெற்று அவனுக்குள்ளும் அவருடைய சுபாவங்களை நிலை நிறுத்தும். பாவம் வேரூன்றிய பழைய இருதயம் கடவுளின் தலையீட்டால் அன்பும், ஏக்கமும் விதைக்கப்படும் புதிய இருதயமாக மாற்றம் பெறும் (எரே. 31:3). அத்தகைய உணர்வைப் பெற்றுக்கொண்ட எரேமியா, கடவுளின் அன்பையும், ஏக்கத்தையும் எரேமியா புத்தகத்தில் வெளிப்படுத்துகிறார்.

எரேமியா என்றால் "யாவே புகழ்கிறார்" என்று அர்த்தம். இவர் ஆனதோத் ஆசாரியனாகிய இல்க்கியாவின் குமாரன். துன்மார்க்கமான யூத ராஜா மனாசேயின் காலத்தில் பிறந்தவர். யூதாவின் கடைசி ஏழு ராஜாக்கள் காலத்தில் வாழ்ந்தவர். யோசியாவின் 13வது வயதில் ஊழியத்தைத் தொடங்கிய இவர் யூத ஜனங்களின் இருதயம் கடவுளுக்கு நேராக திருப்பப்படாததைக் கண்டித்தார். இஸ்ரவேல் தேசம் அசீரியாவால் அடிமைப்பட்ட பின்பும் தன் துன்மார்க்க ஜீவியத்தை விட்டு விலகாத யூதாவின் பாவ நிலையைக் (எரே. 3:6-10) கண்டித்து தீர்க்கதரிசனம் உரைத்தபோது, யூதா கள்ளத்தனமாய் மனந்திம்பியதேயன்றி முழுமையான மனந்திரும்புதலை ஏற்கவில்லை. விடுதலையின் பண்டிகையான பஸ்காவை ஆசரித்தார்களேயன்றி பாவ அடிமைத்தனத்திற்கு விடுதலையாகவில்லை (II நாளா. 35:18, 19). அவர்களுடைய பாவம் இரும்பெழுத்தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டது (எரே. 17:1). அவர்களுடைய பெயர் புழுதியில் எழுதப்பட்டது (17:13). இதனால் தவிர்க்க இயலாத நியாயத்தீர்ப்பு வடக்கேயிருந்து (பாபிலோனிலிருந்து) உண்டாகும் என்று எச்சரிப்பு கொடுக்கப்பட்டது. ஆனாலும் யோயாக்கீம் காலத்திலே உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல் போனதால் பாபிலோனிய முதலாம் சிறையிருப்பு உண்டானது.

மனந்திரும்ப மனதில்லாமல் யூத ஜனங்கள் செய்த பாவங்களை இப்பகுதியில் நாம் விரிவாக சிந்திப்போம்.

### I. அவ நம்பிக்கை அர்ப்பணிப்புள்ள நம்பிக்கையை அழித்துவிட்டது (Disbelief destructed the devoting belief):

நீண்டகால (55 *yrs*) மனாசே ராஜாவின் விக்கிரக ஆராதனைக்கு அடிமைப்பட்ட துன்மார்க்க ஆட்சிமுறையானது (II நாளா. 33:2-6) யோசியாவால் கட்டாயமாக ஆசரிக்கப்பட்ட பஸ்கா பண்டிகையின் அர்ப்பணிப்பிற்கு யூத ஜனங்களை வழிநடத்தவில்லை. பஸ்கா கொண்டாட்டம் மனதின் குரலாக வெளிப்படாமல் சந்தடி குரலாக மட்டுமே வெளிப்பட்டது. *It is not unbelief (Lack of knowledge) but is disbelief (Lack in faith)* அது அறியாமை அல்ல. மாறாக தீவிரமாக கடவுளை நிராகரிப்பதின் வெளிப்பாடு. அது ஆலயத்தை கள்ளர்க் குகையாக்கியது (7:11). இது ஜீவத்தண்ணீர் ஊற்றை விட்டுவிட்டு, தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளைத் தேர்ந்தெடுப்பது போன்றது (எரே. 2:13). அது விக்கிரக ஆராதனைக்கு முகத்தைக் காட்டி தேவனுக்கு முதுகை காட்ட மனநிலையை வெளிப்படுத்தியது (2:27). கடவுளை அலட்சியப்படுத்தியது. அது பிதாக்களைப் பார்க்கிலும் அதிக பொல்லாப்பு செய்வதை (7:26) விரும்பியது. தீட்டுப்பட்ட அருவருப்புகளை எருசலேம் தேவாலயத்திற்குள்ளே கொண்டு வரும் (7:30) கடின இருதயத்தை வெளிக்காட்டியது. இத்தகைய மனாசேயின் பாவங்களும் (15:4), ஓய்வு நாளை மீறிய பாவங்களும் (27:21-27) கடவுளால் விசாரிக்கப்பட்டு, நியாயத்தீர்ப்பு தவிர்க்க இயலாமல் போனது.

### II. தவறான வழிகாட்டுதல் கீழ்ப்படிதலை தவறவிட்டது (Misdirection missed the obedience):

மனாசே ராஜாவால் திணிக்கப்பட்ட விக்கிரக ஆராதனை பாவம் போதாதென்று அன்றைய நாட்களில் இருந்த மேய்ப்பர்களும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் ஜனங்களை மோசம் போக்கினார்கள். மேய்ப்பர்கள் மந்தைகளைச் சிதறடித்தார்கள் (10:21). ஆசாரியர்கள் பொய்யராயிருந்து ஜனங்களை மேற்பூச்சாய் குணமாக்கினார்கள் (8:10, 11). தீர்க்கதரிசிகள்

கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு பொய்யாய் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (14:14). ஆவிக்குரிய வாழ்விற்கு நேராக வழிநடத்த வேண்டியவர்களின் தவறான வழிநடத்துதல் எரேமியாவின் எச்சரிக்கையின் சத்தத்திற்கு செவி கொடுக்க விடாமல் செய்தது. தேவனுடைய வார்த்தைகளைப் புரட்டுகிற இத்தகைய பாவங்கள் அவர்களுக்கு மறக்கப்படாத நித்திய நிந்தையையும், நித்திய இலச்சையையும் வரப்பண்ணினது (23:40).

### III. அநீதி தெய்வநீதியைப் புறக்கணித்தது (Injustice ignoring the devine Justice):

கர்த்தர் தம்முடைய எல்லா வழிகளிலும் நீதியுள்ளவர் (சங். 145:17). அவர் தம்முடைய எல்லா செயல்களிலும், முடிவுகளிலும் பரிபூரண நீதியுள்ளவர். நீதியும், நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம் (சங். 89:14). எனவே அவருடைய பிள்ளைகள் எல்லா சூழ்நிலைகளிலும் நீதியையும், நியாயத்தையும் பின்பற்ற வேண்டியது அவசியமானது. ஆனால் இங்கே யூத ஜனங்கள் திக்கற்றவர்களுடைய நியாயத்தை ஒடுக்கினார்கள். அநியாயத்தை கண்டிக்காமல் விட்டார்கள். தனிப்பட்ட நலனையே முக்கியப்படுத்தி வாழ்ந்தார்கள் (5:27, 28). பொய்யைப் பேச தங்கள் நாவைப் பழக்குவித்தார்கள். அக்கிரமஞ் செய்ய உழைத்தார்கள் (9:5). இவைகளினிமித்தம் அவர்களை விசாரித்து பாதிக்கப்பட்ட ஜனங்களுக்கு நீதியைச் சரிக்கட்டும்படியாக (9:9) கர்த்தரால் யூதா ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மூன்று நிலைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள யூதாவின் பாவங்கள் (கர்த்தரை விட்டுவிடுதல், கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமை, கடவுளின் நீதியை மறுத்தல்) இன்றும் நம்மிடையே பரவலாக காணப்படுகிறது. இப்பாவங்கள் யூதாவிற்கு தவிர்க்க இயலாத சிறையிருப்பின் வாழ்வை (70 வருட பாபிலோனிய அடிமைத்தனம்) கொடுத்தது. சிறையிருப்பிற்கு முன்பாக எச்சரிக்கை செய்தியாக மனந்திரும்புதலின் அவசியத்தையும், சிறையிருப்பின் மத்தியில் பாபிலோன் ராஜாவை சேவியுங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள் (27:12) என்ற முரண்பட்ட செய்தியையும் எரேமியா தன்னை ஊழியத்திற்கு அழைத்த கர்த்தரை முன்னிட்டு பயப்படாமல் அறிவித்தான். எருசலேமின் வீழ்ச்சியின் இறுதி 40 வருடங்கள் கடவுளால் அனுப்பப்பட்ட நியாயத்தீர்ப்பின் வலிகளையும், வேதனைகளையும் கண்ணீர் நிறைந்த கண்களோடு விவரிக்கிறார். இதனாலேயே அவர் புலம்பலின் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறார்.

**கடவுளின் நியாயத்தீர்ப்பு:**

அது கடவுளின் தன்மைக்கு எதிர்வினையாற்றும் போது கற்றுக்கொள்ளும் பாடம். "மனிதனின் பாவ வாழ்வில், கடவுளின் பரிசுத்தத்தை நிலை நாட்ட நியாயத்தீர்ப்பு அவசியம். மனிதனின் கொடூர சுபாவங்களில் கடவுளின் இரக்கமும், கருணையும் வெளிப்படுத்த நியாயத்தீர்ப்பு அவசியம். மனிதனில் புறக்கணிக்கப்பட்ட நீதியில் கடவுளின் நீதி வெளிப்பட நியாயத்தீர்ப்பு அவசியம்".

பிரியமானவர்களே! இன்றைய நாட்களிலும் இத்தகைய பாவக் காரியங்கள் பரவலாய் பரம்பியிருப்பதை நம்முடைய கண்கள் காண்கிறதே! இச்சூழலுக்கு பின்னால் கடவுளின் ஏக்கமும், வேதனையும் பாரமாய் வெளிப்படுகிறதே. "நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" என்று சொல்லும் கர்த்தருக்கு முன்னால், நாம் அவர் ஜனமாயிருக்கிறோமா? யூதாவின் அழிவைக் காண விரும்பாத எரேமியாவின் பாரமுள்ள இருதயம் போன்று நம் இருதயமும் அழிவிற்கு நேராக நடந்து கொண்டிருக்கிற ஜனங்களின் ஆத்துமாவிற்காக பாரம் கொள்கிறதா?

**(எரேமியா 9:1) "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்"**

- 5ம் பக்கத்தின் தொடர்ச்சி

திருமண தேதியை சொல்லணும். (அப்படித்தாண்டா...) ஆனா நம்ம பயல்க "பிதா ஒருவர் தவிர குமாரனும் அறியார்" என்ற வசனத்தை வச்சுக்கிட்டு பிதாவுக்கு கீழ தான் குமாரன் (இயேசு) என்று திரித்துவத்தை திரிக்கிறானுங்க. அதாவது குமாரன் நமக்கு நித்திய வீட்டை ஆயத்தம் பண்ணின பின்பு பிதாவாக தேதியை குறிப்பார். பின்பு மணவாளனாக வந்து நம்மை அழைத்துச் செல்வார். அங்குள்ள கூட்டத்திற்கு புரியனுமுன்னு இயேசு சொன்னதை தப்பா புரிஞ்சுட்டான்க

விஷயம்: சரியா சொன்னடா! சரி Hebrew நிச்சயதார்த்தத்திற்கும், திருமணத்திற்கும் உள்ள word சொல்லேன்

சத்தியன்: நிச்சயதார்த்தத்திற்கு (Kiddushin) என்றும், திருமணத்திற்கு (Nisuin) என்றும் சொல்லுவார்கள். திருமண ஒப்பந்தத்தை (Covenant) Kitubah என்பர். மணமேடையை Chuppah என்பார்கள். (அதாவது நான்கு முனையிலும் குச்சி மேலே ஒரு துணி (Prayer Shall). இதன் அர்த்தம் மணமகன் இல்லம் தேவப்பிரசன்னம் நிறைந்தது. மணமகள் உள்ளே வரவேண்டும். (ஓ.. புல்லரிக்குதுடா) இன்னொரு சுவாரஸ்யமான செய்தியைச் சொல்றேன் கேளுங்க. அதாவது மணமகனை, மணமகள் ஐந்து வார்த்தைகளை (நீதி, நியாயம், கிருபை, உருக்கம், இரக்கம் - ஓசியா 2:19) உச்சரித்தவாறே ஏழு முறை சுற்றிவர வேண்டும். நமக்கு புரியும்படி சொன்னா மணவாளன் இயேசுவை திருச்சபையாகிய மணவாட்டி சுற்றிவர வேண்டும்.

சாதுரியன்: அப்படின்னா மணவாளன் என்ன செய்யணும்

சத்தியன்: அதுவா... மணவாளன் "முந்தி" அன்பு கூற வேண்டும் (I யோவான் 4:19). இதையும் புரியும்படி சொல்லனும்னா மணவாளன் மணவாட்டியிடம் எதையும் எதிர்பார்க்காமல் அதாவது Listல அழகு, செல்வம், வரதட்சணை, சொத்து, வேலை, பணம், கீழ்ப்படிதல்,... (நீ எதிர்பார்க்கிற எல்லாத்தையும் சேர்த்துக்கொள்) முந்தி அன்பு செலுத்த வேண்டும்.

சாதுரியன்: அப்படின்னா கணவன் "கிறிஸ்து" மாதிரி, மனைவி "சபை" மாதிரி அப்படித்தானே.

(மூவரும்: இப்படி இருந்தா... எப்படியிருக்கும்...)

சாதுரியன்: டே எனக்கு ஒரு சந்தேகம். அதாவது சபை நம்ம இயேசு நாதரை வெறும் பேர் சொல்லியோ... அல்லது டேய் வாடா... என்றும் சொல்லலாமா.

விஷயம்: உன் கஷ்டம் புரியுது (அனைவரும் சிரிப்பு)

ரகசியம்: எனக்கும் ஒரு சந்தேகம். காலையிலே எழுந்து ஜெபிக்கிற பழக்கம் இருந்தா, அதாவது சபை மணவாளனை அதிகாலமே தேடினா... நமக்கும் ஒரு டம்ளர் காபி கிடைக்கும்ல... (அனைவரும் சிரிப்பு)

விஷயம்: ஆசைப்படலாம், ஆனா பேராசைப்படக்கூடாது...

(சாப்பிட்டு முடித்து Water Bowlல் கை கழுவுகின்றனர். Bill வந்துவிட்டது) (சத்தியன் Debit Cardயை Bill Presenterயில் வைக்கிறான். Bill Amount Rs. 4679/-)

சாதுரியன்: கல்யாணத்தைப் பத்தி பேசினாலே செலவுதான் போல...

(அனைவரும் புறப்பட்டு சென்றனர்)



# திருச்சபைகள் ஏன் தோல்வி அடைகின்றன?

கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில்

Mrs. Jeba Saral

Hey Teens! எல்லோரும் last Sunday, Churchக்கு போனீங்களா? உங்க எல்லோருக்கும் Churchக்கு போக பிடிக்குமா? இல்லாவிட்டால் Sunday ஆனா Churchக்கு போகனுமேன்னு போறீங்களா? நீங்கள் Churchக்கு போயிட்டு வந்து மனநிறைவுடன், தேவன் என்னோடு பேசினார். நான் நன்றாக தேவனைத் துதித்து ஆராதனைப் பண்ணினேன் என்று சொல்லி இருக்கிறீர்களா? அல்லது ஒரே Bore, இன்னைக்கு எவ்வளவு நேரம் ஆயிடுச்சுன்னு சலிச்சிருக்கிறீர்களா? 1 நிமிடம் சிந்தித்து பாருங்கள். நம்முடைய திருச்சபைகள் தோல்வியடைவதற்கு காரணம், அங்கு வாராவாரம் தவறாமல் செல்கின்ற நாமும், நம்முடைய சாட்சியில்லாத வாழ்க்கையுமே!! இன்று எத்தனைத் திருச்சபைகளில் பதவிக்காக போட்டி, தேர்தல், பொறாமை சண்டை நடைபெறுகிறது. இதனால் Court Case என்று சென்றால், நம்மால் நம்முடைய தேவனுடைய நாமம் புறஜாதிகளிடையே தூஷிக்கப்படும் அல்லவா? அட போப்பா, அந்த Churchல என்னா சண்டை போடுறாங்க, அங்கெல்லாம் போனா நமக்குள்ள இருக்கிற சமாதானமும் போயிரும்ன்னு தானே சொல்லுவார்கள்.

அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, என்று அப். 2 :46யில் கூறப்பட்டுள்ளது. இன்று எங்கே நம்முடைய ஒருமனம், மகிழ்ச்சி. வாலிபர்கள் கூடுகையில் தேவனைத் தேட வந்தோமோ, இல்லையோ பலர் அவர்களுக்கான Loverயைக் காண வருகிறார்கள். இது வேதனை அளிக்கக் கூடியதாய், கபடுள்ள இருதயத்தைக் குறிக்கிறதாயிருக்கிறது. என்மேல கோவிச்சுக்காதீங்க! எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலரால் ஒட்டுமொத்த சபையே இவ்விதமான பேச்சுகளுக்கு ஆளாகின்றது. தன்னலம் மேலோங்கி சபைகளில் எந்த காரியத்திலும் குறைக் கண்டுபிடிப்பது, காணிக்கை எடுத்தல் மற்றும் ஐக்கிய சங்கங்களில் போட்டி, பொறாமை, வேத பாடம் வாசித்தலில் போட்டி, Biryani Orderஇல் போட்டி, அதில் பல குறைகளைக் காணுதல், யாராகிலும் நன்றாக செயல்பட்டு விட்டால் அடுத்த கூடுகைகளில் அவர்களை மட்டுப்படுத்துவது, சபை கட்டுவதில் கட்ட வேண்டும் என ஒரு பிரிவும், வேண்டாம் என்று இன்னொரு பிரிவுக்குள்ளும் பிரச்சனை, இது கைமீறி Court Caseஆக மாறுவது, ஆயர் மீது, Committee மீது Case அப்பப்பா!!! என் அருமை செல்வங்களே! நீங்களும் வளர்ந்து இதே Trendயை Follow பண்ணாதீங்க. இது தேவனுக்கு விரோதமான பகை. பெரும்பாலான சபை இவ்வாறு inward facingஆக மாறி வருகின்ற வேளையில், நாம் தேவனுடைய பலத்தினால் ஆதிகால சபையினரைப் போல outward facingஆக மாறுவோம். என் சபையில் தான் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும், அப்போதுதான் சபைக்கு வர முடியும் எனவும், இன்னும் பல சபைகளில் அந்த ஞானஸ்நானம் செல்லாது, இதுவே போதும் என்று கூறி ஆக மொத்தத்தில் புதிதாக வரும் விசுவாசிகளை ஒருவழியாக்கி விடுகின்றனர்.

அப். 2:38, 41இன் படி ஞானஸ்நானத்தின் நோக்கத்தை நன்கு அறிந்து, உண்மையுள்ள இருதயத்தோடும், ஆத்துமபாரத்தோடும் reaching the unreachedயை குறிக்கோளாகக் கொள்வோம். Church முடிய நேரம் ஆனாலும் பரவாயில்லை, வாஞ்சையோடு கர்த்தரைத் தேடுவோம். நம்மால் முடிந்தவரை நம்முடைய பணத்தாலும், பொருள்களாலும் இல்லாதவர்களுக்கு கொடுத்து, தேவனை அறியாதவர்களுக்கிடையே ஊழியத்தை நிறைவேற்றுவோம். பிறர் நலம் பேணி, எல்லாவற்றிலும் முரண்பாடு காட்டாமல், தேவனுடைய வழிநடத்துதலின்படி தேவ மனிதர்களை மதித்து, தாவீதைப் போல அபிஷேகம் பண்ணப்பட்டவர்களை நடத்துவோம். Gossips நம் காதுகளில் வரும்போது, அதை அப்படியே நம்மோடு off செய்துவிட்டு, அதைக் குறித்து ஜெபிக்க ஆரம்பியுங்கள். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் மாறினால் கண்டிப்பாக நாமும் பிலதெல்பியா சபையைப்போல் (வெளி 3:8-10) தேவனிடத்தில் நற்பெயர், ஆசீர்வாதம், பாதுகாப்பு பெற்று, நம் தேசம் எழுப்புதலைக் காண, நம்மைக் கருவிகளாய் பயன்படுத்துவார் என்பதில் சந்தேகமில்லை.

வட இந்திய
மிஷனெரிப் பணி

# பீஹார்

பீஹார் மாநிலம் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. சமஸ்கிருத வார்த்தையான 'விஹார்' பின்னர் 'பீஹார்' என மறுவியது. 'விஹார்' என்றால் 'தங்குமிடம்' அல்லது 'மடாலயம்' என்று பொருள். பழங்காலத்தில் பல புத்த மடாலயங்கள் இங்கு இருந்ததால் 'விஹார்' என்று அழைக்கப்பட்டது. பீஹார் மாநிலம் கங்கை சமவெளியில் அமைந்துள்ளதால் வேளாண்மை முக்கிய தொழிலாக உள்ளது. இம்மாநிலம் மிஷனெரிகளின் கல்லறைத் தோட்டம் (The Graveyard of Missions) என்றும் அழைக்கப்படுகிறது. இங்குள்ள 38 மாவட்டங்களில் 18 மாவட்டங்கள் நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக உள்ளன. நாட்டுப்புற இசைக் கலாச்சாரம் இவர்கள் வாழ்க்கை நிகழ்வுகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. தோலக், தபேலா, ஆர்மோனியம் இவற்றின் இசை இவர்களின் பாடலுக்கு வலு சேர்க்கிறது. புத்தர் ஞானம் பெற்ற இடமாக கருதப்படும் புத்த கயா பௌத்தர்களுக்கு முக்கிய ஸ்தலமாகவும், மகாவீரரின் பிறப்பிடமான வைஷாலி சமணர்களுக்கு புனித ஸ்தலமாகவும், குரு கோபிந்த் சிங்கின் பிறப்பிடமான பாடலிபுத்ரா (பாட்னா) சீக்கிய மதத்தினரின் ஸ்தலமாகவும் உள்ளது. மசூதிகள் உட்பட ஏராளமான வழிபாட்டுத் தலங்கள் இங்குள்ளன.

## நமது ஊழியம்:

நமது முன்னோடி ஊழியர்களான திரு. பொன்னுசாமி, திரு. பிலிப்போஸ் இவர்கள் மூலம் 1972ஆம் ஆண்டு கயா என்ற இடத்தில் முதல் பணித்தளம் திறக்கப்பட்டது. 1973ஆம் ஆண்டு ராஜ்புத் இனத்தைச் சேர்ந்த அர்ஜுன் பிரசாத், ராம்ஜி சிங் இயேசுவை ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்று தேவ மந்தையில் இணைந்தனர். இம்மாநிலத்தில் இவர்களே முதற்கனி. 1974ஆம் ஆண்டு சிவானில் புதிய பணித்தளம் திறக்கப்பட்டு திரு. தேவவரம் சாம்ராஜ், திரு. ஜாண் பால்தனசிங் அண்ணன்மார் அனுப்பப்பட்டனர். 1976ஆம் ஆண்டு மதுபனி பணித்தளத்தில் மைதிலி மொழி பேசும் மக்கள் மத்தியில் திரு. ஜான்பால் தனசிங்,
திரு. அருமைநாயகம் இருவரும் ஊழியம் செய்தனர். 1979இல் சிவான் பணித்தளத்தில் முதல் ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டது.
26.4.1981ஆம் ஆண்டு மிகநாத்பூர் என்ற இடத்தில் ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிதாமரி என்ற இடத்தில் 1977 ஏப்ரல் மாதத்தில் பணித்தளம் அமைத்து
திரு. அருமைநாயகம், திரு. ஜீவதாஸ் பீட்டர், திரு. முத்துமணி ஆகியோர் ஊழியம் செய்தனர். தொடர்ந்து அநேக ஊழியர்கள் இணைந்து பீஹார் மாநிலத்தில் ஊழியம் செய்தனர்.
தேவனின் கிருபையால் இன்று 8 பணித்தளங்களில் 16 மிஷனெரிகள் ஊழியம் செய்து வருகின்றனர். 333 பேர் மறுமலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். 23 இடங்களில் ஆராதனைக் குழுக்களும்,
5 இடங்களில் சபைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ஊழியத்தின் ஆசீர்வாதங்கள்:

| | |
|---|---|
| சந்திக்கும் மாவட்டங்கள் | - 5 |
| தன்னார்வ ஊழியர்கள் | - 4 |
| ஆராதனைக் குழுக்கள் | - 23 |
| சந்திக்கப்படும் மக்களினங்கள் | - 8 |
| கட்டப்பட்டுள்ள ஆலயம் | - 1 |
| சபைகள் | - 5 |
| மறுமலர்ச்சி பெற்றோர் | - 333 |




## ஜெபிக்க:

- ✦ பீகார் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக
- ✦ வறுமை மற்றும் ஜாதி ஏற்றத்தாழ்வுகள் முற்றிலும் ஒழிக்கப்பட
- ✦ மாநிலம் முழுவதும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்கப்பட
- ✦ வெள்ளம் மற்றும் கடும் வறட்சியிலிருந்து பாதுகாக்கப்பட
- ✦ வேலைவாய்ப்புகளைத் தேடி புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட
- ✦ இளைஞர்களுக்கு போதுமான வேலை வாய்ப்புகளை அரசாங்கம் ஏற்படுத்தித் தர
- ✦ பால்ய சீர்கேடுகள், இளம் பெண்கள் கடத்தல், குடி மற்றும் போதைப் பழக்கம் போன்ற சமுதாய சீர்கேடுகளிருந்து மக்கள் விடுவிக்கப்பட
- ✦ நக்சல் தீவிரவாதிகள் மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் மூலம் வரும் எதிர்ப்புகள் மாற, எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப இம்மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்கள், 45,172 கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட,
- ✦ 13.07 கோடி மக்களும் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள
- ✦ இங்கு ஊழியம் செய்து வரும் மிஷனெரி குடும்பங்களைத் தேவன் வல்லமையாக பயன்படுத்த, நல்ல பாதுகாப்பை கர்த்தர் தர ஜெபிப்போம்.

FIELD - FMPB
Mrs. Vasanthi Emmanuel

Ms. Beulah Baskar

# இடி டிராகனின் நிலம்
# பூட்டான்

பூட்டான் தெற்காசியாவில் இமய மலைச் சாரலின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள நிலத்திடை நாடாகும். திம்பு இதன் தலைநகரமாகும்.

**புவியியல் அமைப்பு:**

இதன் எல்லைகளாக தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கே இந்தியாவும், வடக்கே திபெத்தும் அமைந்துள்ளன. இந்தியாவின் சிக்கிம் மாநிலம் நேபாளம், பூட்டான் ஆகியவற்றைப் பிரிக்கிறது. பூட்டான் மக்கள் தமது நாட்டை “டிரக் யூல்” என அழைக்கின்றனர். பூட்டான் உலகில் மிகவும் ஒதுங்கிய நாடாக இருந்த போதிலும், அண்மையில் அபிவிருத்திகளும், உலக நாடுகளுடனான நேரடி வானூர்தி சேவைகள் மற்றும் இணைய இணைப்புகள போன்றவை வெளியுலகத்துடனான கதவுகளைத் திறந்து விட்டுள்ளன.

**போக்குவரத்து:**

பூட்டான் போக்குவரத்துக் கழகம் சிலிகுரியிலிருந்து வழக்கமான பேருந்து சேவையை நடத்துகிறது. டாக்சிகளையும் வாடகைக்கு எடுக்கலாம். பரோ விமான நிலையம் பூட்டானின் ஒரே சர்வதேச விமான நிலையமாக சேவை செய்கிறது. பரோ விமான நிலையம் புதுடெல்லி, மும்பை, கொல்கத்தா, குவஹாத்தி, பாக்டோகிரா, காத்மாண்டு, டாக்கா, சிங்கப்பூர் போன்றவற்றை இணைக்கிறது. இது தலைநகரத்திலிருந்து சாலை வழியாக சுமார் 54 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

**கலாச்சாரம்:**

மக்கள் தங்களது பழமையான பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். 2006ஆம் ஆண்டில் பிசினஸ் வீக் இதழ் நடத்திய கருத்துக் கணிப்பில், பூட்டான் ஆசியாவின் மிகவும் மகிழ்ச்சியான நாடாகவும், உலகின் எட்டாவது மகிழ்ச்சியான நாடாகவும் தெரிவு செய்யப்பட்டது.

**சிறப்பம்சம்:**

இத்தேசம் மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH) தத்துவத்திற்காகப் பெயர் பெற்றது. பூட்டான் வளர்ச்சிக்கான தனித்துவமான அணுகுமுறைக்கு பிரபலமானது. தேசிய முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வின் அளவீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) விட GNHஐ முன்னுரிமைப்படுத்துகிறது. சின்னமான புலிக்கூடு உட்பட அதன் அழகிய மடாலயங்களுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான அதன் அர்ப்பணிப்புக்கும் இது பெயர் பெற்றது. குறைந்தபட்சம் 60% காடுகளைப் பராமரிக்கிறது.

**ஜெபக்குறிப்பு:**

✦ கலாச்சார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் ஒரு பௌத்த நாடாகும். மேலும் நாட்டின் கலாச்சாரம் மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தில் பௌத்தம் முக்கிய பங்கு வகிக்கிறது. பூட்டானின் அதிகாரப்பூர்வ மதம் பௌத்தம் ஆகும். இது 74.7% மக்களால் பின்பற்றப்படுகிறது. இவர்கள் மத்தியில் சுவிசேஷம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும், இவர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

✦ பூட்டான் மக்கள் தொகையில் 22.6% பேர் இந்து மதத்தைப் பின்பற்றுகிறார்கள். இவர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

✦ பூட்டானின் சர்வதேச விமான சேவையானது பாதுகாப்பாக இருக்கவும், நவீன முறைகளைப் பயன்படுத்தவும், பணியாளர்கள் ஞானத்தோடும், கவனத்தோடும் செயல்பட ஜெபிப்போம்.



## உலக அரங்கில் நம் தாய் தேசம்




## சுதந்திர தின கொண்டாட்டத்தில்

## ஆசீர்வாதங்களுடன்

### முன்னேறும் நம் தேசம்

**என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்...**

**சகலரும் வாழ்ந்து சுகிக்க ... தேசத்தை இயேசுவுக்குப் பரிசளிப்போம்**

இந்தியாவின் வலிமை மற்றும் தனித்துவத்தைக் கொண்டாடுவதும், பிரதிபலிப்பதும் தான் இதன் நோக்கம். தேவன் நமக்கு கொடுத்துள்ள ஆசீர்வாதங்களுக்காக தேவனைத் துதித்து ஆராதிப்போம்.

# மாபெரும் தேசமான நம் இந்தியாவின் 79 ஆசீர்வாதங்கள்

## படைப்பு & விவசாயம்













































# தொழில், உள்கட்டமைப்பு மற்றும் நவீன வளர்ச்சி


மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலகளவில் 5வது பெரிய பொருளாதாரம்.



எஃகு உற்பத்தியில் 2 வது இடம், உலகளாவிய முன்னேற்றத்திற்கு இது முன்னணி


மருந்து ஏற்றுமதியில் 3வது இடம். இந்தியா "உலகின் மருந்தகம்".



உலகளவில் இந்தியா 2வது பெரிய சாலை அமைப்பைக் கொண்டது



இந்திய ரயில்வே 4வது பெரிய ரயில் சேவையைக் கொண்டது


உலகின் மிகப்பெரிய சூரிய மின் நிலையம் ராஜஸ்தானில் உள்ளது.


புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் வளர்ச்சியில் 3வது இடம்.



உலகளவில் முதல் 5 விண்வெளி நிறுவனங்களில் இஸ்ரோவும் ஒன்று.


சந்திரயான்-3 சந்திரனின் தென் துருவத்தில் உலகளவில் முதலாவதாக தரையிறக்கியது.


இந்தியாவில் உலகத்தரம் வாய்ந்த ஐடி (IT) மையங்கள் உள்ளன (பெங்களூர், ஹைதராபாத், புனே).


5.4 மில்லியன் நிபுணர்களுடன் ஐடி (IT) சேவைகளின் முதல் ஏற்றுமதியாளராகும்.


100க்கும் மேற்பட்ட யூனிகார்ன் ஸ்டார்ட்அப்கள், இந்தியாவை ஒரு ஸ்டார்ட்அப் சக்தி மையமாக மாற்றுகின்றன.



டிஜிட்டல் இந்தியா இயக்கம் உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் மாற்றங்களில் ஒன்றை வழிநடத்தியது.



ஆட்டோமொபைல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் வேகமாக வளர்ந்து வருகிறது.


# மக்கள், கலாச்சாரம் & சமூகம்


2வது அதிக மக்கள் தொகை கொண்ட நாடு, இளம் ஆற்றல் நிறைந்தது (35 வயதுக்குட்பட்டவர்கள் 65%).


உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் - சுதந்திரமான, துடிப்பான மற்றும் பன்முகத்தன்மை கொண்டது


குடும்பத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை - கூட்டுக் குடும்பங்கள், பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துவது.


உலகளவில் மிகக் குறைந்த விவாகரத்து விகிதங்களில் ஒன்று, வலுவான சமூகக் கட்டமைப்பு.


உலகளாவிய தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் முதல் 10 இடங்கள் - சமூக உணர்வு உயிருடன் உள்ளது.



பண்டிகை நிறைந்த கலாச்சாரம்: தீபாவளி, ஈத், பொங்கல், கிறிஸ்துமஸ் போன்றவை.


38க்கும் மேற்பட்ட யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள் - நம்பிக்கைகள் மற்றும் பழமையை உள்ளடக்கியது.


கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் சகவாழ்வில் இந்தியா முதலிடம்.


உணவு வகை பன்முகத்தன்மை - ஒவ்வொரு மாநிலமும் சுவையின் புதிய உலகம்.


உயர்ந்த உணர்ச்சி நுண்ணறிவு மற்றும் குடும்ப மதிப்புகள் உண்டு.


300க்கும் மேற்பட்ட பாரம்பரிய நடன பாணிகள் மற்றும் நாட்டுப்புற மரபுகள் கொண்டது.


மத நல்லிணக்கம் கொண்ட நாடு (4 முக்கிய மதங்களின் பிறப்பிடம்).


மிகப்பெரிய புலம்பெயர்ந்தோரின் தாயகம் - வெளிநாடுகளில் மதிக்கப்பட்டு வெற்றிகரமாக உள்ளது.


நமஸ்தே, விருந்தோம்பல், விருந்தினர்களுக்கு மரியாதை ஆகிய கலாச்சார பொக்கிஷங்கள் கொண்டது.


இந்திய திருமணங்களும் சடங்குகளும் அர்த்தம் கொண்டவை. மற்றும் கொண்டாட்டத்திற்காக உலகளவில் போற்றப்படுகின்றன.


இசை, நடனம் மற்றும் இலக்கியம் உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

# கல்வி, இலக்கியம் & மொழி


நாளந்தா & தக்சசீலா போன்ற பண்டைய பல்கலைக்கழகங்கள் - உலகளாவிய அறிவு மையங்கள்.


உலகளவில் ஆங்கிலம் பேசும் மக்கள் தொகையில் 2வது மிகப்பெரிய நாடு.


உலகளாவிய அறிவியல் வெளியீடுகளில் இந்தியா 10% பங்களிக்கிறது.


உலகின் மிகப்பெரிய திறந்தவெளி பள்ளி முறை (NIOS).


இந்தியா வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் தமிழ் சங்க இலக்கியங்களின் தாயகமாகும்.


இந்தியாவில் 19,000 க்கும் மேற்பட்ட பேச்சுவழக்குகள் உள்ளன, அவை மொழியியல் செல்வத்தைக் குறிக்கின்றன.


கலாம், தாகூர், சி.வி. ராமன், ராமானுஜன் - அறிவுசார் ஆளுமைகள்.


காளிதாசர் முதல் பிரேம்சந்த் வரை நவீன எழுத்தாளர்கள் வரை வளமான இலக்கிய பாரம்பரியம்.


பூஜ்யம் மற்றும் தசம எண்களை கண்டுபிடித்து. கணிதத்தில் ஒரு பெரிய முன்னேற்றம் கண்டது.

# ஆன்மீகம் மற்றும் மிஷன் ஆசீர்வாதங்கள்


கிறிஸ்தவம் ஆழமான வேர்களைக் கொண்டுள்ளது - புனித தாமஸ் கி.பி 52இல் வந்தார்.


இந்தியாவில் 33 மில்லியன் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்கள் கலாச்சாரம் மற்றும் சேவையில் வளமானவர்கள்.


மிஷன்களால் நடத்தப்படும் 1,000 தேவாலயங்கள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள்.


சவால்கள் இருந்தபோதிலும், மிஷன் நடவடிக்கைகளுக்கு இந்தியா ஒரு சிறந்த நாடு.


இந்தியாவில் பல்வேறு துறைகளில் சேவை செய்யும் 500+ கிறிஸ்தவ அமைப்புகள் உள்ளன.


இந்தியா உலகளவில் சேவை செய்யும் மிஷனெரிகளை உருவாக்குகிறது.


பழங்குடி மற்றும் கிராமப்புற மண்டலங்களில் பூர்வீக தேவாலயங்கள் வேகமாக வளர்கின்றன.


பைபிள் மொழிபெயர்ப்புகள் பல இந்திய மொழிகளில் உள்ளன.


இந்தியாவின் பாரம்பரிய கலைகள் மற்றும் கைவினை பொருட்கள் உலகளவில் பிரபலமானவைகள்.

# புவியியல், சுற்றுச்சூழல் & பருவங்கள்


உலகின் மிக உயரமான மலையான இமயமலை உள்ளது.


கங்கை, யமுனை மற்றும் பிரம்மபுத்திரா இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.


காஷ்மீர் & ஸ்பிதி போன்ற பள்ளத்தாக்குகள் அழகில் நிகரற்றவை.


பாலைவனம் முதல் பனி சிகரங்கள் வரை 6 முக்கிய காலநிலை மண்டலங்கள்.


இந்தியா அனைத்து முக்கிய பருவங்களையும் அனுபவிக்கிறது: கோடை, பருவமழை, குளிர்காலம், வசந்த காலம்.







# உலகளாவிய பங்களிப்பு & மென்மையான சக்தி






























# நாள்பட்ட நரம்பியல் பிரச்சனைகள்

# CHRONIC NEUROLOGICAL CONDITIONS

மூளை, முதுகெலும்பு மற்றும் நரம்புகளின் பாதிப்பு நீண்ட நாட்கள் இருக்குமாயின் அது நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு என்று அழைக்கப்படுகிறது. அதாவது நரம்பின் செல்கள் சிதைவடைந்து, இறந்துவிடுகின்ற நிலையாகும். இது வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் வயோதிபம் காரணமாக அதிகரித்து வருகின்றன. பக்கவாதம், தலைவலி மற்றும் கால்-கை வலிப்பு ஆகியவை இந்த நாள்பட்ட நரம்பியல் பிரச்சனைகளுக்கு முக்கிய காரணங்களாகும். நாள்பட்ட நரம்பியல் பிரச்சனைகளின் காரணமாக ஊனமுற்றோர் மற்றும் இறப்பு விகிதம் அதிகமாகியுள்ளது. அவை அறிவாற்றல் குறைபாடு, நரம்பு மண்டலத்தின் இயக்கக்கட்டுபாடு செயலிழப்பு, உணர்ச்சி இடையூறுகள் மற்றும் வலிப்புத்தாக்கங்கள் போன்ற பல்வேறு அறிகுறிகளுக்கு வழிவகுக்கும். அல்சைமர், பார்கின்சன் நோய், மல்டிபிள் ஸ்களீரோசிஸ் மற்றும் மூளை அழற்சி (நோய்த்தொற்றுகளால் ஏற்படும் மூளை வீக்கம்) போன்ற வேறு சில பாதிப்புகளாகும்.

## புள்ளிவிவரங்கள்:

1. நரம்பியல் பிரச்சனைகள் இந்தியாவின் மொத்த நோய் பரப்பில் சுமார் 10% ஆகும்.
2. நாள்பட்ட நரம்பியல் பிரச்சனைகளின் பங்களிப்பு 1990இல் 4% இலிருந்து 2019இல் 8.2% ஆக (இரு மடங்காக) அதிகரித்துள்ளது.
3. பக்கவாதம் நாள்பட்ட நரம்பியல் பிரச்சனைகளினால் வரும் மரணத்திற்கு ஒரு முக்கிய காரணமாகிறது. 2019ஆம் ஆண்டில் 1.29 மில்லியன் மக்கள் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 699,000 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.
4. தலைவலி பிரச்சனை 2019ஆம் ஆண்டில் இந்தியாவில் மிகவும் பரவலாக இருந்த நரம்பியல் பிரச்சனையாகும், இது 488 மில்லியன் மக்களைப் பாதித்தது. ஒற்றைத் தலைவலி பெண்களிடையே அதிகம் காணப்படுகிறது.
5. 2019ஆம் ஆண்டில் 11.3% மக்கள் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டனர். இந்தியாவில் மட்டும் 10.1 மில்லியன் மக்கள் கால்-கை வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
6. பெருமூளை வாதத்தினால் 5.7% மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
7. மூளைக்காய்ச்சலினால் 5.3% மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
8. அல்சைமர் நோய் மற்றும் பார்கின்சன் நோயும் குறிப்பிடத்தக்க மற்றும் வளர்ந்து வரும் பங்களிப்பாளர்களாக உள்ளன. வயதான மக்கள் தொகை அதிகரித்து வருவதால் 2050ஆம் ஆண்டில் டிமென்ஷியா மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜெபிக்க:

- பாதிக்கப்பட்டவர்கள் பாதிப்பிலிருந்து விடுதலை பெற்று, முழுமையாக குணமடைய (E.G. - அறிவாற்றல் குறைபாடு, நரம்பு மண்டலத்தின் இயக்கக்கட்டுப்பாடு செயலிழப்பு, உணர்ச்சி இடையூறுகள், பேச்சு மற்றும் நினைவாற்றல்)
- நாள்பட்ட வலி, அசௌகரியம் மற்றும் பிற கடினமான அறிகுறிகளிலிருந்து நிவாரணம் பெற (E.G. - நடுக்கம், வலிப்புத்தாக்கங்கள், சோர்வு, தலைச்சுற்றல், உணர்வின்மை) மற்றும் இவர்களின் நிம்மதியான தூக்கம் மற்றும் ஓய்வுக்காக
- அன்றாட சவால்களைச் சமாளிக்க உடல் வலிமை மற்றும் நம்பிக்கையை இழக்காமல், நோயின் தன்மையை எதிர்கொள்ள மற்றும் மன சோர்வடையாமலிருக்க
- தனிமை மற்றும் விரக்தியின் தருணங்களில் அவர்களின் ஆறுதலுக்காக
- நாள்பட்ட நோயுடன் தொடர்புடைய கவலை, பயம் மற்றும் மனச்சோர்வு ஆகியவற்றிலிருந்து விடுபட
- கவனிப்பு, சிகிச்சை மற்றும் அன்றாட வாழ்க்கை தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பராமரிப்பாளர்களுக்கு ஏராளமான பொறுமை, புரிதல், இரக்கம் மற்றும் ஞானம் இருக்க
- மருத்துவச் செலவுகள், சிகிச்சைகள், உதவிக் கருவிகள் மற்றும் தொடர்ந்து பராமரிக்கப்படும் பராமரிப்பு ஆகியவற்றை ஈடுகட்ட போதுமான நிதி கிடைக்க
- நரம்பியல் வல்லுநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், சிகிச்சையாளர்கள் அனைவரும் நோயறிதல், சிகிச்சையில் ஞானம், பகுத்தறிவு மற்றும் திறனோடு செயல்பட
- புதிய மற்றும் மிகவும் பயனுள்ள சிகிச்சைகள், மருந்துகள் கண்டுபிடிப்பின் வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.



Mrs & Mr. Godwin

# கொலாம் மக்கள்



"கொலா" என்றால் குச்சி அல்லது மூங்கில் என பொருள். கொலாம் மக்கள் மூங்கில் பொருள்களைச் செய்வதினால் கொலாம் என பெயர் பெற்றிருக்க வேண்டும். தெலுங்கானா, மத்தியபிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா மாநிலங்களில் சுமார் 2.5 லட்சம் பேர் வாழ்கின்றனர். ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் இவர்கள் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள் பிரிவை சேர்ந்தவர்கள். திராவிட குடும்பத்தைச் சேர்ந்த இம்மக்கள் கொலாமி என்ற மொழியை பேசுகின்றனர். இவர்கள் காடுகளில் உணவுப் பொருள் சேகரிப்பு, மீன்பிடித்தல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர்.

## மத நம்பிக்கைகள்:

கொலாம் மக்கள் ஆவி வணக்கம் உடையவர்கள். இயற்கையையும் மூதாதையர்களையும் வழிபடுகின்றனர். ரேணுகா, ஜைத்தூர், மரோட்டி, பைரூம், சன்சூர்யாக், ஜெலாயக் இவர்களின் தெய்வங்கள். சாவடி என்ற ஊரின் பொது மையத்திற்கு எதிரில் கிராமத் தேவதை கோவில் அமைக்கப்பட்டு இருக்கும். "பீமதேவா" இவர்களின் கடவுள்களில் முக்கிய ஒருவர். பீமண்ணா கொண்டாட்டம் மூன்று நாள் நடைபெறும். சமீப காலங்களில் இந்து தெய்வ தேவதைகளையும் வழிபடுகின்றனர்.

## சமூக அமைப்பு:

கொலாம் மக்கள் வாழும் கிராமம் "போட்" என அழைக்கப்படும். ஒவ்வொரு கிராமத்திற்கும் நாயக் தலைமையிலான ஒரு நிர்வாக அமைப்பு இருக்கும். இந்த நாயக் ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 18 முதல் 20 வயதிற்குள் திருமணம் நடைபெறுகிறது. திருமணமான பெண் தாலி அணிகிறாள். இவர்களுக்கு வரதட்சணை கொடுக்கும் பழக்கம் கிடையாது. இங்கு ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களே அதிகம் நடைபெறுகிறது.

## சுகாதாரம்:

கொலாம் மக்கள் மத்தியில் அரிவாள் செல் ரத்த சோகை (SICKLE CELL ANEMIA) அதிகமாகவுள்ளது. பரம்பரை வியாதியான இந்த இரத்த சோகையால் 15.89% பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் தலசிமியா என்ற பரம்பரை வியாதியும் மக்களுக்குள் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியங்கள்:

மகாராஷ்டிராவில் 1993ஆம் ஆண்டு இம்மக்கள் மத்தியில் ஊழியத்தை நாம் ஆரம்பித்தோம். பாண்டர்கவுடாபகுதியில் நமக்கு நூற்றுக்கணக்கான விசுவாசிகள் உண்டு. ஊழியர் பற்றாக்குறையால் தற்போது அப்பகுதியில் நாம் ஊழியம் செய்யவில்லை. இம்மக்கள் மத்தியிலிருந்து ஆண்டவரை ஏற்றுக்கொண்ட மூன்று பேர் நம்மோடு மிஷனெரிகளாக ஊழியம் செய்து வருகின்றனர்.

## ஜெபியுங்கள்

1. ஆவி வணக்கம் உள்ள இவர்கள் ஜீவ தேவனை அறிந்து கொள்ள ஜெபிப்போம்.
2. கொலாமி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டை இவர்கள் பயன்படுத்த, இயேசு திரைபடம் மூலம் இவர்கள் மனமாற்றம் அடைய ஜெபிப்போம்.
3. இம்மக்கள் மத்தியில் இருக்கும் தலசிமியா, சிக்கிள் செல் அனீமியா போன்ற கொடிய வியாதிகள் மாற ஜெபிப்போம்.
4. மறுபடியும் இவர்கள் மத்தியில் ஊழியர்கள் அனுப்பப்பட, முழு சமுதாயமும் ஆண்டவரை அறிந்து கொள்ள ஜெபிப்போம்.



PRAYER POINTS - PEOPLE GROUP

Mr. Suriya Kumar

# பகுதி நேர வேலை மோசடி

Ms. Lily Reaiah Grace

வேலை தேடி RESUME உடன் வரிசையாக COMPANYக்களின் கதவை தட்ட வேண்டிய காலம் போய் இப்போது எல்லாமே MAIL, ONLINE APPLICATION, ZOOM INTERVIEW, REMOTE WORK என மாறிப் போன காலக்கட்டத்தில் பகுதி நேர (PART TIME) வேலை மோசடிகள் பெருகி வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏற்கனவே செய்யும் முழு நேர வேலையை தவிர்த்து பல தனிப்பட்ட காரணங்களுக்காக பகுதி நேர வேலைகளைத் தேடும் இளைஞர்கள், இல்லத்தரசிகள், முதியவர்கள், என அனைவரையும் குறிவைத்து நடைபெறுகிறது இந்த மோசடி. இத்தகைய வேலை வாய்ப்பு மோசடிகள் மக்களின் பணம், நேரம் மற்றும் தனிப்பட்ட தகவல்களைப் பறிக்க முயல்கின்றன. தமிழ்நாட்டில் சமீபத்தில் பிரபல PENCIL COMPANYயின் பெயரில் PACKING செய்து தந்தால் பணம் என கூறி ஒரு பகுதி நேர வேலை மோசடிக்கு பலர் தங்கள் பணத்தை இழந்தது அனைவரும் அறிந்த செய்தி.

## பகுதி நேர வேலை மோசடியின் பல முகங்கள்:

- **அசம்பிளி/பேக்கிங் வேலை மோசடி:** உங்களுக்கு சில பொருட்களை அனுப்பி வைப்போம் அவற்றை இணைத்துத் தர வேண்டும் அல்லது பேக் செய்து தர வேண்டும் என்று சொல்லுவார்கள். அந்தப் பொருளுக்கான முதலீட்டு தொகையை முதலில் செலுத்த சொல்லுவார்கள், சில நேரங்களில் மலிவான தரம் உடைய பொருட்களை அனுப்புவார்கள். ஆனால் பெரும்பாலும் தொகையை செலுத்தின பின் பொருளும் அனுப்ப மாட்டார்கள், பணத்தையும் திருப்பி செலுத்த மாட்டார்கள்.
- **டேட்டா என்ட்ரி வேலை மோசடி:** அதிக ஊதியத்துடன் எளிதான வேலை என கூறி, முன்னதாக SOFTWARE வாங்க அல்லது பயிற்சிக்கான கட்டணம் என ஒரு தொகையை செலுத்த சொல்லுவார்கள்.
- **கூகிள் டாக் மோசடி:** இந்த மோசடியில் வேலையில் இணையும் வழிமுறைகளின் போது GOOGLE DOCUMENTS வழியாக தீங்கு விளைவிக்கும் வைரஸ்களைக் கொண்ட இணைப்புகள் அனுப்பப்படலாம் அல்லது (PHISHING) ஃபிஷிங் தளங்களுக்கு அந்த நபர் திருப்பிவிடலாம்.
- **INDEED/LINKEDIN வேலை மோசடி:** மோசடி செய்பவர்கள் போலியான LINKEDIN சுயவிவரங்களை உருவாக்கி, பணியமர்த்தல் மேலாளர்கள் (HIRING MANAGER) அல்லது ஆட்சேர்ப்பு செய்பவர்கள் (HUMAN RESOURCE) என்று காட்டிக் கொண்டு பொய்யான வேலை வாய்ப்புகளை செய்தியாக அனுப்பி, முக்கியமான தகவல்களை விரைவாகக் கேட்டு அவசரப்படுத்துவார்கள், அல்லது பணம் பறிப்பார்கள்.
- **போலி அரசு வேலைகள்:** அனைத்து அரசு வலைத்தளங்களும் தங்கள் வலைத்தள முகவரியின் ஒரு பகுதியாக GOV.IN அல்லது NIC.INஐ கொண்டுள்ளன (எ.கா. WWW.MHA.GOV.IN). அனைத்து அரசு நிறுவனங்களும் எப்போதும் முன்னணி செய்தித்தாள்கள் மற்றும் வேலைவாய்ப்பு செய்திகளில் காலியிடங்களை விளம்பரப்படுத்துகின்றன, இது தவிர்த்து வரும் மற்ற விளம்பரங்கள் பெரும்பாலும் போலியானவை.

## வலையில் சிக்காமல் இருக்க சில வழிமுறைகள்:

- குறைந்தபட்ச முயற்சிக்கு அதிக ஊதியத்துடன் கூடிய சாத்தியமற்றதாகத் தோன்றும் வேலை வாய்ப்புகளைத் தவிர்க்கவும்.
- முழு நம்பிக்கை இல்லையென்றால், வங்கிக் கணக்கு விவரங்கள் அல்லது ஆதார் போன்ற பிற முக்கிய தனிப்பட்ட தகவல்களைப் பகிர வேண்டாம்.
- வேலைக்கு, முதலீடாகவோ மென்பொருள் அல்லது பின்னணி சோதனைகளுக்காகவோ, ஒருபோதும் பணம் செலுத்த வேண்டாம்.
- வேலை தளங்களின் தனியுரிமைக் கொள்கையைச் (PRIVACY POLICY) சரிபார்க்கவும்.
- வேலையின் நம்பகத்தன்மையைச் ஆராய்ந்து சரிபார்க்கவும்.
- எழுத்துப்பிழை, இலக்கண மற்றும் நிறுத்தற்குறி பிழைகள் இருந்தால், அது ஒரு மோசடியாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக "INFO@COMPANY.COM"க்கு பதிலாக "INFO@COMPANIE.COM" அல்லது "INFO@COMPAANY.COM" போன்றவை.
- எந்த நேரத்தையும் முயற்சியையும் முதலீடு செய்வதற்கு முன், வேலை வழங்கும் நிறுவனம் அல்லது நபரின் சட்டப்பூர்வத்தன்மையைச் சரிபார்க்கவும்.
- நேரடி வைப்புத்தொகை (DIRECT DEPOSIT) அல்லது பாதுகாப்பான ஆன்லைன் கட்டணத் தளங்கள் மூலம் செய்யப்படும் பண பரிமாற்றங்களைத் தவிர பரிசு அட்டைகள், பிற பணப் பரிமாற்ற சேவைகள் அல்லது தனிப்பட்ட காசோலைகள் போன்ற கட்டண முறைகளைத் தவிர்க்கவும்.

## ஜெபக் குறிப்புகள்:

- ✦ வேலை தேடுபவர்கள் விழிப்புடனும், தெளிந்த புத்தியுடனும் செயல்பட, பாதிக்கப்படுவோர் விரைவாக எந்த தயக்கமும் வெட்கமுமின்றி செயல்பட்டு புகார் அளிக்க, பணத்தை இழந்தவர்கள் திரும்ப பெற்றுக் கொள்ள
- ✦ மற்றவர்களின் உழைப்பை திருடத் தூண்டும் இச்சையின் ஆவியின் ஆதிக்கம் விலகி, இக்குற்றங்களில் ஈடுபடுவோர் கண்டுபிடிக்கப்பட்டு மனந்திரும்ப, சீர்திருத்தம் அடைய
- ✦ நம் தேசத்தில் நிலவும் வேலை வாய்ப்பின்மை நிலை மாறி, உண்மையான வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட
- ✦ காவல்துறை, சைபர் குற்றப்பிரிவு அதிகாரிகள் ஞானத்துடனும், விவேகத்துடனும் செயல்பட
- ✦ பொய்யான வேலை வாய்ப்பு விளம்பரங்கள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள், இணையதளங்கள் அனைத்தும் கண்டறியப்பட்டு முடக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட ஜெபிப்போம்.



## தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

(நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

# இலையசந்திரம் திருச்சபை வரலாறு







Rev. Ruban Ramalingam

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் விளைவாக இலையசந்திரம் பகுதியில் 1983ஆம் ஆண்டு ஊழியர் கனம் தாமஸ் அண்ணன் மூலமாக பின்னமங்களம் அங்கன்வாடியில் பணிபுரிந்த சின்னசாமி என்பவருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அப்பகுதியில் சுவிசேஷம் விதைக்கப்பட்டதின் விளைவாக மதனகிரியப்பா (மாற்கு), நாராயணப்பா (ஜேம்ஸ்) இவர்கள் இருவருக்கும் 1984ஆம் ஆண்டு பெத்தேல் வளாகத்தில் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. ஆபிரகாம் என்ற சகோதரர் சரீர பலவீனத்தோடு முடியாத நிலையில் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அப்பொழுது ஆலயத்தில் அவருக்காக ஜெபித்தபோது அற்புதம் சுகம் பெற்றுக் கொண்டார்கள்.

- 1984ஆம் ஆண்டு முதன் முதலில் ஆராதனை சிறியதாய் நடத்தப்பட்டது.
- 1985ஆம் ஆண்டு மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டு இரட்சிக்கப்பட்டார்கள். ஆத்துமாக்கள் அதிகமாகி வந்ததால் தொடர்ந்து ஞாயிறு ஆராதனைகள் நடத்தப்பட்டது.
- 7 மிஷனெரி குடும்பங்கள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துவந்தார்கள்.
- 6 சுதேச குடும்பங்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்திருக்கிறார்கள்.
- 2 நபர்கள் முழு நேர ஊழியம் செய்கிறார்கள்.
- 3 தன்னார்வ ஊழியர் இணைந்தார்கள்.
- 130 நபர்களுக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது.

32 ஆண்டுகள் தொடர்ந்து ஆத்தும ஆதாயப் பணியிலும், சுவிசேஷங்கள் அறிவிக்கப்படுவதிலும், தனி நபர் ஊழியத்திலும், கிராம ஊழியங்களிலும், ஊழியர்கள், மிஷனெரிகள், சபை நிர்வாகிகள், விசுவாசக் குடும்பங்கள் அனைவரும் இணைந்து கர்த்தருடைய பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆலயம் பழுதடைந்த சூழ்நிலையின் காரணத்தினால் 2016ஆம் ஆண்டு அன்று ஆலயம் இடிக்கப்பட்டு, புதிதாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலமாக சென்னைப் பகுதியிலிருந்து டாக்டர். சந்திரசேகர் கிறிஸ்டில்லா குடும்பத்தார் மூலமாக ஆலயம் கட்டிக் முடிக்கப்பட்டு, தேவனுக்கு மகிமையாய் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தொடர்ந்து தேவனை ஆராதிப்பதிலும், ஆத்தும ஆதாயப் பணியிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### துதிக் குறிப்புகள்:

- சுவிசேஷம் அறிவிக்கக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்கும் கிராமத்திலிருந்து புதிதாக இரண்டு குடும்பங்கள் சபைக்கு வருகிறார்கள்.
- சபை வாலிபர்கள் கிராம ஊழியத்திலும், இரவு கூட்டங்கள் நடத்துவதிலும் மற்றும் சபை ஆராதனை நடத்துவதிலும் உற்சாகமாக செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தேவன் வாலிபர்கள் மத்தியில் ஒரு பெரிய எழுப்புதலைக் கொண்டு வந்திருக்கிறார்.
- நமது சபை விசுவாசி வடிவேல் சாலொமோன் குடும்பத்தில் ஒசூர் பகுதியில் 3 சென்ட் நிலம் உள்ளது. இந்து முன்னணி மக்கள் நிலத்தை அபகரித்து, இந்து கோயில் கட்டி ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருந்தார்கள். தொடர்ந்து உபவாசித்து, ஜெபித்து அந்த குடும்பத்திற்கு வேத சத்தியங்களைச் சொல்லி ஆறுதல்படுத்தி ஜெபித்துக் கொண்டிருந்தோம். தேவன் மாபெரும் மாற்றத்தை உண்டாக்கி அவர்களே உங்கள் நிலத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி கட்டின அவர்களது கோயிலை இடித்துவிட்டு, நமது விசுவாசி குடும்பங்களுக்கு அந்த நிலத்தை மீண்டும் கொடுத்துவிட்டு சென்றார்கள்.

### ஜெபக் குறிப்புகள்:

- சபையைச் சுற்றி 5 கிராமங்கள் உள்ளன. கிராமத்தில் இருக்கின்ற ஜாதி வெறி மற்றும் மதம் சார்ந்த கட்டுப்பாடுகள் மாறப்பட
- இப்பகுதியிலிருக்கும் குடிப்பழக்கங்கள், மாந்திரீகங்கள், பில்லிசூனியங்கள் போன்ற காரியங்கள் மாறப்பட
- சபைக்கு வருகின்ற தேவப் பிள்ளைகளின் ஆவிக்குரிய மந்த நிலை மாறி, சபையில் எழுப்புதல் காணப்பட, மக்கள் தேவ தரிசனத்தை அறிந்து செயல்பட ஜெபிப்போம்.



# இயேசுவின் ஜெப ஊழியம்

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. M. Jerome Stanley

சுவிசேஷப் புத்தகத்தில் இயேசுவின் ஜெப ஊழியத்தைப் பற்றி இந்த செய்தியில் நாம் பார்க்கப்போகிறோம். நான்கு சுவிசேஷத்தில் வெறும் 19 இடங்களில் தான் இயேசு ஜெபித்தார் என்று பார்க்கிறோம். இதில் அவர் ஞானஸ்நானம் (லூக்கா 3:21) துவங்கி, கொல்கதாவில் சிலுவையில் மூன்று முறை (லூக்கா 23:34, மத். 27:46, 47, லூக்கா 23:46) ஜெபித்தார் என்று நாம் அறிந்திருந்தாலும் நம் சிந்தையில் அவர் மூன்றரை ஆண்டு ஊழியத்தில் வெறும் 19 முறைதான் ஜெபித்தாரா என்ற எண்ணம் துளி அளவு வந்து விடக் கூடாது. காரணம், ஜெபத்தை அவர் நிகழ்ச்சி நிரலில் வைக்கவில்லை அல்லது அற்புதங்களின் ஆரம்பத்தில் அற்புதம் நிகழ்த்துவதற்காக ஜெபம் பண்ணவில்லை. இந்த செய்தியில் இயேசுவின் ஜெப ஊழியம் என்று அழைப்பதை நிறுத்திவிட்டு, இயேசுவின் ஜெப வாழ்க்கை என்று கூறினால் பொருத்தமாக இருக்கும். மேலும், நாம் அறிய வேண்டியது ஜெபம் இயேசுவிற்கே அவசியம் மற்றும் இன்றியமையாதது என்றால் நமக்கு அது எத்தனை முக்கியம் என்பதை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

சகரியா டேனிஃபோம் என்ற தேவ மனிதன் தனது "அப்பா பிதாவே" என்ற புத்தகத்தில் (நம் இயக்கம் மொழிப்பெயர்த்த புத்தகம்) இயேசுவின் ஜெப ஊழியத்தை குறிப்பிடும் பொழுது அவர் சொல்லும் கணக்கை நாம் பார்க்கலாம். அது சற்று வித்தியாசமாக நம்மை யோசிக்க வைக்கும். அதாவது மூன்றரை ஆண்டு கால தன் ஊழியத்திற்காக இயேசு 18 ஆண்டுகள் ஜெபத்தில் தரித்திருந்தார். அதாவது வேதாகமத்தில் 12வது வயதில் ஆலயத்திற்கு வருகிறார். அதன்பின் 30வது வயதில் ஞானஸ்நானம் பெறுகிறார். அப்படியானால் 18 ஆண்டுகள் அவர் ஜெபத்தில்தான் தரித்திருக்கவேண்டும் என்று கூறுகிறார். அதாவது ஒரு ஆண்டுகால ஊழியத்திற்கு அவர் 5.3 ஆண்டுகள் ஜெபத்தில் தன்னை ஆயத்தப்படுத்தியிருக்க வேண்டும் என்கிறார். இது உண்மை என்றும் கூறலாம். இதை வாசிக்கும்பொழுது நாம் நினைவில் கொள்ள வேண்டியது, நாம் செய்யும் ஊழியத்திற்கு அதை விட ஐந்து மடங்கு ஜெபிக்கிறோமா என்று நாம் சிந்திக்கவேண்டும். இன்று நாம் ஊழியத்திற்காக திட்டமிடுகிறோம், தயார் செய்கிறோம். ஆனால் ஊழியம் செய்ய ஜெபிக்கிறோமா என்பதுதான் மில்லியன் டாலர் கேள்வி. நீங்கள் செய்யும் ஊழியத்தின் அளவிற்கு இணையாக ஐந்து மடங்கு அதிகமாக ஜெபித்து நாம் ஊழியம் செய்யும் பொழுது, அது பெருத்த ஆசீர்வாதமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இயேசுவின் ஜெப வாழ்வை இந்தப் பத்தியில் நாம் பார்ப்போம். இயேசு ஜெபித்த ஜெப நேரங்கள் அதிகாலையில் (மாற்கு 1:35), பகல் (மாற்கு 6:46), சாயங்காலம் (மாற்கு 6:47), இராமுழுவதும் (லூக்கா 6:12), தனிமையாக (லூக்கா 5:16) மற்றும் சீடர்களோடு (லூக்கா 9:18). ஜெபித்த இடங்கள் என்று பார்க்கும்பொழுது நதியில் மற்றும் சிலுவையில் என்று முன்னதாக நாம் பார்த்திருந்தாலும் கடற்கரையில், தனிமையான இடத்தில், மலையில் மற்றும் வனாந்திரத்தில் என்று சுவிசேஷ புத்தகத்தில் நாம் காணலாம். ஜெபித்த சூழ்நிலை என்றால் 12 சீடர்களைத் தேர்வு செய்யும் முன்பும், 70 சீடர்களை ஊழியத்திற்கு அனுப்பும் முன்பும், முதன் முதலில் தான் ஆரம்பித்த கலிலேயா ஊழியத்திற்கு முன்பும், அற்புத சுகத்திற்கு முன்பும், 5000 மற்றும் 4000 பேரை போஷிக்கும் முன்பும் அவர் ஜெபித்தார். இது அனைத்தும் நமக்கு முன்மாதிரியைக் கற்பிக்கவே என்றால் மிகையாகாது. நாம் நன்கு அறிந்திருக்கிறபடி இயேசு மறுரூபமலையிலும், இராப்போஜனத்திலும், கெத்செமனே தோட்டத்திலும் ஜெபித்தார் .

இயேசுவை நமக்கு முன்மாதிரியாக வைத்திருக்கும் நம்முடைய ஜெப வாழ்வு எப்படி உள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப நிகழ்வு, ஊழியம், சபை மற்றும் ஆலய நிகழ்ச்சிகள் போன்றவைகளில் முதலிலும், கடைசியிலும் ஜெபம் செய்வோம் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. ஆனால் அதைத் தொடர்ந்த நிகழ்வுகள் இயேசுவோடு தொடர்பு உள்ளதாக இருக்கிறதா என்பதை நாம் கவனித்தாக வேண்டும். அப்படி யோசித்தால் இன்று சபைகளிலும், சங்கங்களிலும் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பதில் கிடைத்துவிடும்.

தம்பி, தங்காய் ஜெபம் கடவுளிடம் நீ வாங்கும் அனுமதியோ (Permission) அல்லது ஒப்புதலோ (Approval) அல்ல. கடவுளின் திட்டத்தின்படி (God's Plan) நடக்க அல்லது கடவுளின் சித்தம் (God's Will) செய்வதற்கான அடையாளமே ஜெபம் என்பதை மறந்து விடாதே. உனக்கு புரியும்படி சொன்னால் உன் திருமண வாழ்க்கைக்கு ஜெபிக்கிறாய் நல்லது. அது கடவுளின் ஒப்புதல் பெறவா அல்லது கடவுளின் சித்தம் நிறைவேற்றவா என்பதை நீ உணர வேண்டும். ஒருவேளை உன் திருமண வாழ்க்கைத் துணையை நீ முடிவு செய்த பின் கர்த்தரிடம் ஜெபத்தின் மூலம் சொல்லிவிட்டு (ஒப்புதல் வாங்கிவிட்டு) நீ திருமணம் செய்யலாம். ஆனால் அது 100% வெற்றியை தரும் என்பது நிச்சயம் கிடையாது. ஆனால் அதே வேளையில் கர்த்தரின் சித்தம் நிறைவேற்ற ஜெபித்து, கீழ்படிந்து முன்னேறினால் அதில் தோல்வி என்பதற்கான அறிகுறியே இருக்காது.

**இயேசுவின் ஜெப சிந்தையை உன் சிந்தையாக ஏற்று, உனக்கும், சபைக்கும் மற்றும் தேசத்திற்கும் ஜெபிக்க முழங்கால் படியிட வா! தேவ சித்தத்தை நிறைவேற்றுவோம் வா!**

# வீட்டு வாசற்படியில்

அடிமையின் அந்தஸ்தில் இஸ்ரவேலின் செல்ல மகள்
ஆழமாய் ஆண்டவரை அறிந்த தெய்வமகள்
ஆரவாரமின்றி ஆலோசனைக் கொடுத்த அன்பு மகள்
ஆனந்த மகிழ்ச்சியோடு வழி அனுப்பியவள்

"நாகமானின் வீட்டு வாசற்படியில்"
- பெயர் தெரியவில்லை

அனுமதி கடிதம் பெற சீரிய வீரநாயகன்
அரண்மனை சென்று காரியத்தைச் சொல்ல
அரசனும் கடிதத்தோடு பரிசு பொருட்களையும் கொடுக்க
அமைதிப்படை ஒன்று புறப்படுகிறது... வழியனுப்ப அரசனின் பரிவாரங்கள்

"அரண்மனையின் வாசற்படியில்"
- சிறு கூட்டம்

ஆண்டவரின்றி ஆடிக்கொண்டிருந்த இஸ்ரவேலின் அரசன்
ஆலோசனைக்கு ஆண்டவரின் தீர்க்கதரிசியை அழைத்தாரோ - (அல்லது)
அரண்மனைச் செய்தியை தீர்க்கதரிசி கேட்டாரோ...
அனுமதி கடிதத்தோடு என்னன்டை அனுப்பு என்ற அன்பின் கட்டளையை எடுத்துக் கொண்டு புறப்பட்ட ஊழியர்

"எலிசாவின் வீட்டு வாசற்படியில்"
- பெயர் இல்லை

அழுது துடித்துக் கொண்டிருந்த இஸ்ரவேலின் ராஜா
அமரிக்கையில் வாழும் இஸ்ரவேலின் தீர்க்கதரிசி
ஆரவாரமின்றி சொல்லி அனுப்பிய செய்தி
ஆண்டவரை நான் காட்டுகிறேன் - அது உன்னால் முடியாது
ஆணவச் செருக்கில் - ஆளும் திமிரையும் எடுக்க வேண்டும்
ஆறு சரீர சுகம் கொடுக்கட்டும்... என்ற செய்தியோடு...
- அதே நபர்

"ராஜாவின் வீட்டு வாசற்படியில்"
- பெயர் இல்லை

அரண்மனையில் வைத்து சிகிச்சை ஆரம்பிக்கும் என்றவனுக்கு
அதிர்ச்சியான செய்தி - சுகத்திற்கு நீ செல்ல வேண்டிய இடம் "தீர்க்கனின் வீடு"
அவமானம், தலைக்குனிவு, கோபம், செருக்கு, அதிகாரம், நோயின் கொடூரம்... நிறைந்தவனாய்
வேறு வழியின்றி
அழைப்புக்கு காத்து நிற்கும் இடம்

"எலிசாவின் வீட்டு வாசற்படியில்"
- நாகமான் (2 இராஜா. 5:9)

அழைப்பு இல்லை, ஆளைப் பார்க்கவும் இல்லை - செய்தி மட்டும் வந்தது
ஆளைப் பார்க்காமல் ஓர் மருத்துவ முறையா!!
கேலியாக நினைத்துக் கொண்டார்.
அனுப்பி வைத்த "இஸ்ரவேலின் மகளை" கொலை செய்ய தீர்மானித்திருக்கலாம்.
ஆறு... என் தேசத்தில் அதிகம், அழகு, தூய்மை ஏன்... இங்கு
ஆலோசனை தனக்கு கீழிருந்து வருகிறது
ஆண்டவரின் பூமி இது. மண்ணை குழைத்து பூசினால்
அற்புதம் நிகழும் - உன் பதவிக்கு அது அழகில்லை
ஆறில் சென்று தானே மூழ்க சொல்லுகிறார்
அதிர்ச்சி குறையவில்லை. அவமானம் தலைக்கு ஏறுகிறது - சகித்தவனாய்
அமைதலோடு யோர்தானுக்கு புறப்படும் கூட்டம்,
வழியனுப்பும் ஊழியர்

"எலிசாவின் வீட்டு வாசற்படியில்"
- கேயாசி

ஆறுமுறை மூழ்கி எழுந்தான்
ஆறா துயரத்தில் நிற்க... மீண்டும்
ஆலோசனை இன்னும் ஒரு முறை தானே
ஆழ்ந்து மூழ்கி எழுந்தான் வீரநாயகன்
ஆணவம் போனது அற்புதம் நிகழ்ந்தது
ஆன்மீக சுகம் முதலில் உடல் சுகம்
தொடர்ந்து வந்தது

Mrs. Kiruba



**இப்போது...**
**மூழ்கி சுகம் பெற வேண்டியவர்கள்**
**"உன் வீட்டு வாசற்படியில்..."**

# HOLY SPIRIT
## GIFT & FRUIT

HOLY SPIRIT என்பது கிறிஸ்தவத்தின் மைய கருத்தான பிதாவாகிய கடவுள், குமாரனாகிய கிறிஸ்துவுடன் தெய்வீக இயல்பைப் பகிர்ந்துகொள்ளும் திரித்துவத்தின் மூன்றாவது ஆளுமை. வேதாகமத்தின் தொடக்கம் முதலே திரித்துவம் (ஆதி. 1:2, 3) விவரிக்கப்பட்டுள்ளது. ஆவி என்பதன் எபிரெய வார்த்தை ருவாக். இது கடவுளின் தனிப்பட்ட இருப்பை விவரிக்க வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்ட பதமாகும். இயேசு ஊழியத்தைத் தொடங்கிய போது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்து இறங்கி அவர் மேல் தங்கினார் (யோவான் 1:32). இயேசுவும் தம்மோடுகூட ஊழியத்தைப் பெற்றுக்கொண்ட சீடர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் (யோவான் 20:22). அவருடைய மரணத்திற்குப் பின்பு எப்பொழுதும் மனுமக்களுடன் இருக்கும்படியாக சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளன் நமக்கு தந்தருளப்பட்டார் (யோவான் 14:16). ஆகவே மரித்து, உயிர்த்து, இன்றும் ஜீவிக்கிற கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு இரட்சிப்பின் அச்சாரமாக அவர் தந்தருளிய பரிசுத்த ஆவி முத்திரை போடப்படுகிறது (எபே. 1:13, 14).

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு 9 வகையான ஆவியின் வரங்களையும் (1 கொரி. 12:8-10), 9 வகையான ஆவியின் கனியையும் (கலா. 5:22, 23) வழங்குகிறார். இவையிரண்டும் கடவுளின் இயல்பு. அவருடைய பரலோகராஜ்யம் மற்றும் விசுவாசிகளாக நமது அடையாளம் குறித்த உண்மை என்ன என்பதைக் கண்டறியும் கருவிகளாக இருக்கிறது.

| | GIFT (GOD'S DEVINE POWER) | FRUIT (GOD'S DEVINE CHARACTER) |
|---|---|---|
| 1. | ஞானத்தின் வார்த்தை, அறிவின் வார்த்தை, விசுவாசம், குணப்படுத்தும் வரங்கள், அற்புதங்களைச் செய்தல், தீர்க்கதரிசனம், ஆவிகளைப் பகுத்தறிதல், பல்வேறு வகையான பாஷைகளைப் பேசுதல், பாஷைகளின் விளக்கம் என்பவை ஆவியின் வரங்களாகும். | அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவை ஆவியின் கனியாகும். |
| 2. | இது பரிசுத்த ஆவியின் செயல்பாட்டால் விசுவாசிகளுக்கு வழங்கப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட கடவுளின் அதிகாரம். | இது பரிசுத்த ஆவியின் செயல்பாட்டால் விசுவாசிகளின் வாழ்வில் மெருகேறும் கடவுளின் தெய்வீகக் குணம். |
| 3. | கடவுளின் வல்லமையை நிரூபிக்க வழங்கப்படுகிறது. | கடவுளின் அன்பை நிரூபிக்க வழங்கப்படுகிறது. |
| 4. | பரிசுகள் சேவைக்காக வழங்கப்படுகிறது. *(It's Given)* | பழங்கள் நற்குணங்களாக வளர்க்கப்படுகின்றது. *(It's Grown)* |
| 5. | தனிப்பட்ட லாபத்திற்காக, தனி நபர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பொது நன்மைக்கு மட்டுமே. | தனிப்பட்ட நபர்களின் மாற்றம் பெற்ற இருதயம் மற்றும் கடவுளிடம் சரணடைந்த வாழ்வில் புலப்படும் அடையாளம் |
| 6. | பரிசுகள் நபருக்கு நபர் மாறுபடலாம். | எல்லா விசுவாசிகளிடமும் தெளிவாக தெரிய வேண்டும் |
| 7. | ஆவியின் வரங்களை ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரி. 12:11) | ஆவியின் கனி, தனித்தனி பண்புகளாக பிரிக்கப்படாமல் ஒருங்கிணைந்த முழுமையான நற்பண்புகளின் தொகுப்பு (எபே. 5:9) (கனிகள் அல்ல கனி) |
| 8. | திருச்சபையைக் கட்டி எழுப்பவும், ஊழியத்திற்கு தயார்ப்படுத்தவும், கடவுளை மகிமைப்படுத்தவும் வழங்கப்படுகிறது. | தனிப்பட்ட விசுவாசிகளின் வாழ்வில் அவருடைய ஆவியின் பிரசன்னத்தினால் விளையும் இயல்பான மகிமைப்படுதலுக்கு வழங்கப்படுகிறது. |
| 9. | பரிசுகள் உடனடியாக வழங்கப்படுகிறது. ஆன்மீக முதிர்ச்சியைக் குறிப்பிடவில்லை. | விசுவாசிகளின் முதிர்ச்சியடைந்த நம்பிக்கையின் விளைவால் படிப்படியாக உருவாகிறது. |
| 10. | விசுவாசி என்ன செய்கிறான் என்பதை வரையறுக்கிறது. *(Define what a believer does)* | விசுவாசி யார் என்பதை வரையறுக்கிறது. *(Define who a believer is)* |

ஒரு விசுவாசியின் வாழ்க்கை தரம், வாழும் விதம் மற்றும் அவர்களின் குணாதிசயம் என்பது விசுவாசியின் தனிப்பட்ட செயல்கள் அல்லது சாதனைகளைவிட முக்கியம்.

ஆவியின் வரங்களால் அல்ல (மத்தேயு 7:22). ஆவியின் கனியினாலே நாம் அறியப்படுவோம் (மத்தேயு 7:20). ஆமென்!

***ITS NOT WHAT YOU DO,***
***BUT HOW YOU LIVE THAT MATTERS***

Rev. Daniel Gnanapragasam

# பாடனுபவித்தலால் ஊழியம்



Mr. Israel Nathaniel Edward

"ஊழியம்" (கிரேக்க மொழியில் DIAKONIA) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவை செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் பாடுபடுதல் எவ்வாறு ஊழியம் செய்ய வாய்ப்பளிக்கிறதென பார்க்க இருக்கிறோம்.

கடந்த மாதம் சாட்சிகளாக இருப்பதினால் எப்படி ஊழியம் செய்யலாம் என கற்றறிந்தோம். கிறிஸ்துவுக்காக பாடுபடுவது கிறிஸ்துவுக்கு சாட்சியாயிருக்கும் வழிகளில் ஒன்றாகும். துன்பம் என்பது ஒரு சாராருக்கான அழைப்பு அல்ல; மாறாக அது அனைத்து கிறிஸ்தவர்களுக்குமுள்ள அழைப்பு. நம்முடைய கர்த்தராகிய இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் ஆரம்பகால சீடர்கள் அனைவரும் துன்பங்களை அனுபவித்தனர். இயேசுவும், அப்போஸ்தலர்களும், சீடர்கள் பாடனுபவிப்பார்கள் என முன்கூட்டியே எச்சரித்திருக்கிறார்கள் (மத். 5:10-12, 2 தீமோ. 3:12, 1 பேதுரு 1:6). நீதிக்காக பாடுபடுவது எப்படி மற்றவர்களுக்கு ஊழியமாக மாறுகிறது?

**மற்றவர்கள் பின்பற்ற ஒரு முன்மாதிரி:**

ஆரம்பத்திலிருந்தே சீடர்கள் மிகுந்த துன்பங்களை அனுபவித்தனர். எருசலேமில் உள்ள யூத கிறிஸ்தவர்கள் யூதமதத் தலைவர்களால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டனர். இறுதியாக ஏறத்தாழ கி.பி 35இல் ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்த பின்னர், அவர்கள் முற்றிலும் சிதறடிக்கப்பட்டனர். ரோமானிய உலகில், முதல் விசுவாசிகளில் பெரும்பாலானோர் அடிமைகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களாய் இருந்தனர். எனவே அவர்கள் தங்கள் எஜமானர்களால் துன்புறுத்தப்பட்டதோடு, பலர் தமது வாழ்வாதாரத்தை இழந்தனர் (2 கொரி. 8:2). ரோமானிய கடவுள்களையும், பேரரசரையும் வணங்க மறுத்ததால், ஆரம்பகால கிறிஸ்தவர்கள் ரோமானியப் பேரரசால் அவ்வப்போது துன்புறுத்தல்களை எதிர்கொண்டனர். அவர்கள் பேரரசின் சமூக மற்றும் அரசியல் ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாகவும் கருதப்பட்டனர் (அப். 16:20, 17:6). வன்முறை மற்றும் சில நேரங்களில் மரணத் தண்டனைகளை உள்ளடக்கிய இந்த துன்புறுத்தல், நீரோ (கி.பி 54-68) மற்றும் டையோக்லெடியன் (கி.பி 303-311) போன்ற பேரரசர்களின் ஆட்சியின் போது தீவிரமாக இருந்தது. இருப்பினும் மரணத்திற்கு பிந்தைய தங்கள் வாழ்க்கையின் மீது உறுதியான கண்களை வைத்த விசுவாசிகளின் தைரியமான சாட்சியின் காரணமாக, இது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதிலிருந்து மக்களைத் தடுக்கவில்லை (2 தீமோ. 4:6-8). இறுதியாக கி.பி 313இல் பேரரசர் கான்ஸ்டன்டைனால் பிரகடனப்படுத்தப்பட்ட மிலன் அரசாணையுடன் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவை வணங்குவதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டது. இன்றும் கூட இந்தியாவில் கிறிஸ்தவத்தை கடைபிடிப்பதற்காக அரசாங்க அமைப்புகள் மற்றும் மத அடிப்படைவாதிகளிடமிருந்து அதிகரித்து வரும் துன்புறுத்தல்களை நாம் எதிர்கொள்கிறோம். இருப்பினும், முதல் கிறிஸ்தவர்களின் மாதிரியை நாம் பின்பற்றினால், கிறிஸ்துவுக்காக பாடுபட விரும்பும் உண்மையான விசுவாசிகளின் மகத்தான வளர்ச்சிக்கு இது வழி வகுக்கும். இறுதியில் ஒரு நாள் பெரும்பாலான இந்தியர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள்.

நமது பிரச்சனைகளை நாம் புறக்கணிக்கக் கூடாது. மாறாக, மற்றவர்களின் பயத்தையும், கவலையையும் போக்க அந்த அனுபவங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

**மற்றவர்களுக்கு ஆறுதல்:**

துன்பம் என்பது மனித வாழ்வின் ஒரு பகுதியாகும். இருப்பினும் நம் பிரச்சனைகளில் நமக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய ஒருவரை நாம் தேடுவது இயற்கையானது. ஆண்டவரும், அவருடைய வார்த்தையும் நமக்கு ஆறுதல் அளிக்கும் என்பதை அறிந்திருந்தாலும் கூட, நாம் மனித உதவியை நாடுகிறோம். எந்த நெருக்கடியிலும் இருப்பவர்களுக்கு என்னால் ஆறுதல் கூற முடியும் என்று பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதினார் (2 கொரி. 1:4). அவர் அசாதாரணமான துன்பங்களுக்கு ஆளானதால் இந்த அற்புதமான திறனை அவர் கொண்டிருந்தார். அவர் தாங்க முடியாத கஷ்டங்களை அனுபவித்ததாகவும், அவர் இறந்துவிடுவார் என்று அஞ்சியதாகவும் கூறினார்
(2 கொரி. 18:8-9). ஆசியா மைனரில் அவர் எதிர்கொண்ட இடையூறுகளின் அலைகளை அவர் குறிப்பிட்டிருக்கலாம். அவை தெமேத்திரியுஸ் மற்றும் அவரது சக வெள்ளிக் கொல்லர்களால் உருவாக்கப்பட்டன
(அப். 19:23-25). எனினும் தேவன் அவரைக் காப்பாற்றி ஆறுதலளித்தார். இதேபோல், தேவனிடமிருந்து நாம் பெறும் துன்பங்களும், ஆறுதல்களும் இதே போன்ற பிரச்சனைகளில் உள்ளவர்களுக்கு ஆறுதல் அளிக்க நமக்கு பெலன் அளிக்கும். எனவே நமது பிரச்சனைகளை நாம் புறக்கணிக்கக் கூடாது. மாறாக, மற்றவர்களின் பயத்தையும், கவலையையும் போக்க அந்த அனுபவங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

**கிறிஸ்துவுக்காக மற்றவர்களைச் சந்திப்பதற்கான ஒரு வழி:**

கடைசி நாட்களைப் பற்றிய தனது விளக்கத்தில் இயேசு மிகவும் தெளிவாக பின்வருவனவற்றை குறிப்பிட்டுள்ளார். மத வெறியர்கள் மற்றும் சிறைத்தண்டனைகளால் அவரது சீடர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாவார்கள். அவர்கள் நீதிமன்றங்களால் விசாரிக்கப்படுவார்கள். இருப்பினும், இந்தத் தருணங்கள் அவரைப் பற்றி சாட்சி பகர வாய்ப்புகளாக இருக்கும் (லூக்கா 21:12, 13). பவுலை அழைத்தபோது, புறஜாதியார், அவர்களின் மன்னர்கள் மற்றும் இஸ்ரவேலர்கள் முன் கடுமையான துன்பத்தின் மூலம் பவுல் சாட்சியாக இருப்பார் என்று கர்த்தர் அனனியாவுக்கு வெளிப்படுத்தினார் (அப்.9: 15, 16). நம்முடைய கர்த்தர் சொன்னபடி பேதுரு, யோவான், யாக்கோபு, பவுல் மற்றும் பிற விசுவாசிகள் பல துன்பங்களை அனுபவித்தனர். அவர்கள் கிறிஸ்துவுக்காக பாடுபடுவதற்கு ஒருபோதும் வெட்கப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு சம்பவத்தையும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பாக மாற்றினர். எனவே, நற்செய்தியின் பொருட்டு தேவன் நம்மை துன்புறுத்தலின் ஊடாக அழைத்துச் செல்லும்போது நாம் பயப்படக்கூடாது. ஆனால் பேதுரு குறிப்பிட்டுள்ளபடி, நமக்கிருக்கும் நம்பிக்கைக்கான காரணத்தைச் சொல்ல, நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இதை நாம் சாந்தத்தோடும், கனிவோடும் செய்ய வேண்டும் (1 பேதுரு 3:15).

இதை வாசிக்கும் அன்பு தம்பி, தங்கைகளே, நம் வாழ்க்கையில் துன்பங்கள் வகிக்கும் முக்கிய பங்கை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? நம் இரட்சகராகிய இயேசுவைப் போல இன்னும் அதிகமாக மாறுவதற்கு அவை நமக்கு உதவுகின்றன. நமது சக விசுவாசிகளின் விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவை பெலன் அளிக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, அவை நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கான விசேஷ வாய்ப்புகளை வழங்குகின்றன. **எந்த துன்பத்தையும் பொருட்படுத்தாமல் கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பதற்கு நீங்கள் உங்களை அர்ப்பணிப்பீர்களா?**

# குதிரை வாசல்

### குதிரை வாசல் - வரலாற்றுச் சூழலில்

நெகேமியா 3:28இல், எருசலேமின் வாசல்களில் குதிரை வாசல் பரிசீலனையில் இருந்தது. எருசலேமின் சுவர் மீண்டும் கட்டப்பட்டபோது இந்த வாசல் பழுதுபார்க்கும் பணிக்கு உட்பட்டது. பழுதுபார்க்கும் பணி எருசலேமிலுள்ள ஆசாரியர்களால் மேற்கொள்ளப்பட்டது (நெகேமியா 3:28). ஒவ்வொரு ஆசாரியர்களும் தனது சொந்த வீடுகளுக்கு முன்னால் இருந்த குதிரை வாசலின் உடைந்த இடத்தை பழுது பார்த்தனர். நகரத்தின் பாதுகாப்பு மற்றும் எருசலேமின் பாதுகாப்பு படையின் அன்றாட நடவடிக்கைக்கு குதிரை வாசல் முக்கியமானது. எருசலேமின் குதிரை வாசல் குதிரைகள், ரதங்கள் மற்றும் இராணுவப் போக்குவரத்து மற்றும் பிற படைப்பிரிவுகள் வெளியே சென்று நுழைய முக்கிய வாசலாக இருந்தது.

### குதிரை வாசல் - குறியீட்டு அர்த்தத்தில்

குதிரை வாசல் போர், போர்-குதிரைகள் மற்றும் போர்வீரர்களின் வெளியேற்றம்-போருக்குப் பிறகு நுழைவு புள்ளி, போர் ஒலி மற்றும் இராணுவத்தின் ஆயுதங்களைத் தாக்குவது மற்றும் பாதுகாப்பது ஆகிய இரண்டிற்கும் தொடர்பு கொண்டுள்ளது. எபே. 6:10-18இல் கடவுளின் முழு கவசத்தையும், எதிரியின் இடம் மற்றும் விவரங்களைப் பற்றி கூறுகிறது. இது விழிப்புணர்வைப் பற்றியும், போருக்குத் தயாராக இருப்பதைப் பற்றியும், தீய சக்திகளுக்கு எதிர்த்து நிற்பதைப் பற்றியும் கூறுகிறது. குதிரை வாசல் ஆயத்த நிலை, விசுவாசமென்னும் கேடகம், வேதவசனமாகிய ஆவியின் பட்டயம் ஆகியவற்றின் குறியீட்டு அர்த்தங்களைத் தெரிவிக்கிறது.

> கிராமங்கள், நகரம் மற்றும் பழங்குடிப் மக்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கிக்க முழுநேர மற்றும் கலாச்சார மிஷனெரிகளை FMPB எதிர்நோக்கியுள்ளது.

### குதிரை வாசல் - மொழியின் கருத்தில்

குதிரை வாசல் என்ற சொல் "ஷா'ஆர்" என்ற எபிரெய சொற்றொடரிலிருந்து வந்தது. அதாவது வாசல் மற்றும் "சுசிம்" என்பது 'சுஸ்' அதாவது குதிரை என்பதின் பன்மை வடிவமாகும். குதிரை வாசலில் குறிப்பிட்ட செயல்பாடு இருந்தது என்பதை எபிரெய சூழல் வலியுறுத்துகிறது. இது இராணுவம் மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்காக அதன் வரலாற்று பயன்பாட்டுடன் ஒத்துப்போகிறது.

### குதிரை வாசல் - ஊழியத்தின் பார்வையில்

தேவனுடைய யுத்தத்திற்கு ஆயத்தமான ஒரு போர் வீரனாக இருங்கள். வெற்றி கர்த்தரிடத்திலிருந்து வருகிறது. குதிரைகள் போருக்குத் தயாராகி வருகின்றன, எனினும் வெற்றி கர்த்தரிடத்திலிருந்து மட்டுமே வருகிறது. இருப்பினும், எருசலேமின் மதில் உடைக்கப்பட்டபோது, எருசலேமின் இராணுவம் அதைப் பயன்படுத்தவில்லை. எருசலேமின் சுவர்கள் மற்றும் வாசல்களை மறுகட்டமைப்பது கிறிஸ்தவர்கள் தங்கள் சமூகங்களுக்குள் பங்கேற்க அழைக்கப்படும் கூட்டு மற்றும் மறுசீரமைப்பு பணியை பிரதிபலிக்கிறது.

கடவுளின் போருக்கு அதிக போர்வீரர்கள் தேவைப்படுகிறார்கள். உலகம் தீயவரின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. ஜீவனுள்ள தேவனின் பிள்ளைகளாகிய நாம், இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அறியாத மக்களுக்கு சென்றடைய அர்ப்பணிப்புள்ள போர்வீரர்களாக செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

### குதிரை வாசல் - FMPB பார்வையில்

கிராமங்கள், நகரம் மற்றும் பழங்குடி மக்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கிக்க முழுநேர மற்றும் கலாச்சார மிஷனெரிகளை FMPB எதிர்நோக்கியுள்ளது. உண்மையான கடவுளை அறியாத மக்கள் இருளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இருளிலுள்ள மக்களை வெளிச்சத்திற்கு கொண்டுவர உடைந்த "குதிரை வாசலை" சரிசெய்ய FMPB உங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. அதாவது ஆவிக்குரிய பயணத்தில், தேவனுடனான உறவைச் சரிசெய்து, அவருடைய படையில் சேர உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் முன்னேறிச் செல்லும் இவ்வியக்கத்தில் இணைய FMPB வாய்ப்பளிக்கிறது. கலாச்சார மிஷனெரியாகவும், மருத்துவ மிஷனெரியாகவும், பைபிள் மொழிபெயர்ப்பாளராகவும் இவ்வியக்கத்தில் இணையலாம். உங்கள் குதிரை வாசலைச் சரிசெய்வது என்பது ஆவிக்குரிய வாழ்வை மற்றும் விசுவாசத்தை சரிசெய்து அதில் உறுதியாயிருக்க வேண்டும். FMPB என்பது நம்முடைய வாழ்க்கையை மறுசீரமைத்து கடவுளுக்காக ஊழியம் செய்யும் இடமாகும்.

எருசலேம் வாசலின் வழியாய் பிரவேசிப்பதுபோல, FMPB ஊழியத்தில் இணைந்து நற்செய்தியை அறிவிக்க நீங்கள் ஆயத்தமா? FMPB இயக்கத்தின் மூலம் கடவுளின் போரில் இணைந்து நற்செய்தியைப் பரப்புவோம் வாருங்கள்!



அப்போ! இப்போ! எப்போ!!

Rev. Prabakara Sarathy

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

2025

# 3 நாள் உபவாச ஜெப முகாம்

இடம்: அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்

கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர்

ஆகஸ்ட் 8 வெள்ளி காலை 10 மணி முதல்
10 ஞாயிறு மதியம் 2 மணி வரை



- துதி ஆராதனை பாடல்கள்
- தேசத்துக்காக ஜெப நேரங்கள்
- அனலூட்டும் செய்திகள்
- பணித்தள பகிர்வுகள்

செய்தியாளர்கள்

**Rev. M. ராஜ்** – சென்னை | **Pastor. ராஜா** – நாகர்கோவில்

**Rev. விஜய் பி. ஐசக்** – பொதுச் செயலாளர் FMPB

பாரத தேசம் இயேசுவின் அன்பினைக் கண்டிட, தேவனின் பாதத்தில் அமர்ந்து, உபவாசித்து ஜெபிப்போம் வாருங்கள்!

9488805454 | 9444396208

---

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
தமிழ்நாடு மண்டலம்

# தீமோத்தேயுவின் கூடாரம்

TIMOTHY'S TENT

நாள்: 16 2025 ஆகஸ்ட் சனிக்கிழமை
காலை 10.00 முதல் மாலை 4.00 வரை

இடம்: FMPB கிறிஸ்து நாதர் ஆலயம்
சூளகிரி

செய்தியாளர்கள் :

**Rev. இம்மானுவேல் ரஞ்சித்சிங்**
**Rev. டேனியல் அருள்மணி**

SNACKS AND LUNCH WILL BE PROVIDED

பெரியமலையில் நடந்த வாலிபர் முகாம் மற்றும் கூடுகைகளில் கலந்து கொண்ட வாலிபர்கள் தவறாமல் இக்கூடுகையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

தரிசனப் பிரியர் எழும்ப வேண்டும்.
கிறிஸ்துவை என்றும் உயர்த்த வேண்டும்.

CONTACT: FMPB - 99423 15036 / 97418 85571 / 93633 67535
94426 97289 / 90429 33891

---

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

செங்குன்றம், காரனோடை, காவாங்கரை & புழல்

# வாலிபர் கூடுகை

இடம்: ECI தூய பவுல் ஆலயம்
1/1128, கலைஞர் கருணாநிதி தெரு
(கணேஷ் எடை மேடை அருகில்)
காந்தி நகர், செங்குன்றம்.

நாள்: 27 2025 ஆகஸ்ட் புதன்கிழமை
காலை 9.30 முதல்
மாலை 4.00 வரை
(அரசு விடுமுறை)

செய்தியாளர்கள்

**திரு. Y. நவநீதர், FMPB**

**Bro. ஆக்னல்** - பட்டுக்கோட்டை
(JOY Awareness Ministries)

LIVELY SONGS | ENGAGING SESSIONS | INSPIRING MESSAGES

SCAN HERE

SNACKS AND LUNCH WILL BE PROVIDED

சபை பாகுபாடின்றி வாலிபர்கள் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்!

CONTACT: FMPB - 99520 05188 / 90032 04202

---

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
பாடி பிராந்தியம்

# வாலிபர், இளம் வாலிபர் மற்றும் சிறுவர்கள் கூடுகை

# COME and SEE

JOHN 1:39



ஆகஸ்ட் 3 ஞாயிறு
மாலை 3 முதல் 7 வரை

C.S.I தூய மிகாவேல் ஆலயம்,
42, மதியழகன் நகர், பாடி

தேவ செய்தி
Rev. இம்மானுவேல் ரஞ்சித்சிங், FMPB

பணித்தள செய்தி
Rev. நாகராஜன்,
மஹாராஷ்டிரா

Scan for Pre Registration

- LIVELY SONGS
- ENGAGING SESSIONS
- INSPIRING MESSAGES

SNACKS AND DINNER WILL BE PROVIDED

COME AND PARTICIPATE ALONG WITH YOUR FRIENDS

தொடர்புக்கு FMPB: 98412 23099, 98840 93587, 90422 18032